உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-ருஉ.] துன்முகி ஸு புரட்டாசி-மார்கழி மீ [பகுதி-கக-கஉ.

Vol. 52. October-1956—January-1957. No. 11-12.

உள்ளுறை

தமிழிலக்கியம் கற்க வழிமுறை: 321
அ. கி. பரந்தாமனார்

என்றுமுள தென்றமிழ்: 337
டாக்டர். மா. இராசமாணிக்கனார்

மலையாள மறவர்: 345
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

மதிப்புரை: 351
டாக்டர். மா. இராசமாணிக்கனார்

தமிழ்ப் பொங்கல்: 353
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

செந்தமிழ் 52-ஆம் தொகுதியின் உள்ளுறை முதலியன

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1957

"செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செக்காவலர், ஆ. கார்மேகக்கோனர், மதுரை

3. டாக்டர். மா. இராசமாணிக்கனர் M. A. M. O. L. L. T Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

"செந்தமிழ்" அன்பர்களுக்கு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற ஐம்பத்திரண்டு ஆண்டுகளாகத் தமிழ் வளர்ச்சி கருதித் திங்கள் ஒருமுறை வெளியிடப் பெற்றுவரும் இச் "செந்தமிழ்", அறிஞர்பலரும் எழுதியுதவும் அரிய பொருளை எவரும் எளிதில் உணரத் தெளிவிக்கும் பெருமை வாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. இதன் ஐம்பத்திரண்டாந் தொகுதி இப் பகுதியோடு முற்றுப் பெறுகின்றது. இனி ஐம்பத்து மூன்றாந் தொகுதி வெளிவர இருக்கிறது.

இதற்குமுன் கார்த்திகைத் திங்கள் முதல் தொடங்கியது போலல்லாமல், இனிப் புதியமுறையில் செந்தமிழ் இதழ் தைத் திங்கள் முதலாகத் தொடங்கப் பெறும். எனவே ஐம்பத்து மூன்றாந் தொகுதியின் முதற்பகுதியும் தொடர்ந்து விரைவில் வெளிவரலாகும். ஆகவே செந்தமிழ்ப் புத்தாண்டு இனி, தைத் திங்கள் முதல் மார்கழித் திங்கள் முடிய என்று யாவரும் குறிக்கொள்ளத் தக்கது.

அவ் வாண்டுச் சந்தாத் தொகையை, அன்பர்கள் மு[illegible] பணமாக இப்பொழுதே அனுப்பிவிடுதல் நலம். அடுத்துவரும் மாசித் திங்கள் இருபதாம் நாளுக்குள், இம் மதுரைத் தமிழ்ச் சங்க மேலாள[illegible] முகவரிக்குப் பணம் அனுப்பாத அன்பர்களுக்கு, ஐம்பத்து மூன்றாந் தொகுதியின் முதற்பகுதி, வழக்கம்போல், வி. பி. வாயிலா[illegible] அனுப்பப் பெறும். வழக்கமாகச் செந்தமிழ் வாங்கும் அவர், அ[illegible]னைப் பெற்றுக்கொள்ளாமல் திருப்பிவிடுவார்களானால் இச் சங்க[illegible]துக்கு வீண் செலவு நேரும். ஆகையால் அன்புகூர்ந்து, நண்ப[illegible] அனைவரும் வி. பி. யைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொ[illegible]ளப் பெறுகின்றனர்.

மதுரை
5—2—57

S. சிவஸ்வாமி,
மேலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௨.] துன்முகி௵-புரட்டாசி-மார்கழி௴ [பகுதி-௧௧-௧௨.

Vol. 52. October-1956—January-1957. No. 11-12.

தமிழிலக்கியம் கற்க வழிமுறை

திரு. அ. கி. பரந்தாமனார், M. A., தியாகராசர் கல்லூரி, மதுரை.

(320-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரைநடை இலக்கியங்களைக் கற்பதில் தொல்லை இல்லை; செய்யுள் வடிவில் அமைந்த இலக்கியங்களைப் படிப்பதில்தான் தொல்லைஉண்டு. ஆகையால் கற்பவர்கள் செய்யுள் இலக்கியங்களைக் கற்பதற்குத் திறமையை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். ஆங்கிலம் கற்றோர் சிலர் போதிய பயிற்சிபெறாது சங்க இலக்கியங்கள் கடுமையான தமிழில் இயற்றப்பட்டிருப்பதாக அஞ்சாது தங்கள் குறை உணராது முறையிடுகின்றனர். இது அறியாமையால் கூறுவது. பொன் சுரங்கத்தில் புகுந்து பொன்னை எடுப்பவர்கள் அத் தொழிலுக்கு ஏற்ற திறமை பெற்றபின்பே சுரங்கத்தில் நுழைந்து வேலை செய்வார்கள். அது போலவே தமிழ்ப் பொற்சுரங்கத்தில் புக விரும்புகிறவர்களும் ஏற்ற திறமைபெற வேண்டும். உலகப் புகழ் பெற்றுள்ள ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஆங்கிலம் சிறிது கற்றவர்கள் படித்து இன்புற முடியுமா? அல்லது, இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள் எல்லாரும் அந் நாடகங்களைக் கற்று இன்புற முடியுமா? முடியாதே. அங்ஙனமாயின் சிறிய அளவு

தமிழ் மொழிப் பயிற்சி யுடையவர்கள் எங்ஙனம் சங்க இலக்கியங்களைப் படித்து இன்புற முடியும்? இலக்கியம் படிப்பதற்கு மொழித்தேர்ச்சி வேண்டுவதில்லையா? ஓரளவு இலக்கண அறிவு வேண்டுவதில்லையா? உரைகள் உண்டு; உண்மைதான். அவ்வுரைகள் விளங்க வேண்டுமே! மொழித்தேர்ச்சி பெற்றால்தானே அவ்விறவாத இலக்கியங்களைக் கற்றுச் செவ்வையாக இலக்கிய இன்பத்தை நுகரமுடியும்?

என்ன செய்யவேண்டும்? சுமக்கவேண்டுமா? இல்லை. முதலில் தமிழிலக்கியப் பரப்பைச் சுருங்கிய அளவில் தெரிந்துகொள்ளவேண்டும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு என முப்பத்தாறு செய்யுள் நூல்கள் உண்டு. இவற்றையெல்லாம் சங்கம் மருவிய நூல்கள் என்பர். பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் பல சங்க காலம் என்று கூறப்படும் காலத்திற்குப் பிற்பட்டவை. எனினும், அவற்றையும் சங்கம் மருவிய நூல்களாகச் சொல்வது மரபு. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை பெருங் காப்பிய வகையைச் சேர்ந்தவை. உதயண குமாரகாவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி என்பன ஐஞ்சிறு காப்பியங்கள். தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யபிரபந்தம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவை சமயச் சார்புடையனவாயினும், இலக்கியச் சுவையுடையன. கம்பராமாயணம் வைணவ சமய நூலாயினும், இதிகாசக் கதையாயினும், சமயங்கடந்து நிற்கும் காப்பியச் சுவை மிகுந்த கவிதைக் கருவூலம். வில்லிபாரதம் வடமொழி மிகுந்த இனிய செய்யுளால் அமைந்த இதிகாச நூல். பிற்காலத்தில் உருவான அந்தாதி, கலம்பகம், தூது, கோவை, பள்ளு, பரணி, உலா, குறவஞ்சி முதலியவை சிறுசிறு நூல்கள். கலம்பகம் ஆசிரியரின் பாடுந் திறனைக் காட்டுங் கழைக்கூத்து. பள்ளு என்பது உழவர் பாட்டு. குறவஞ்சி என்பது குறத்தி பாட்டு. முக்கூடற் பள்ளும், குற்றாலக் குறவஞ்சியும் தமிழிலுள்ள இசை நாடகங்கள்; இவை

சிறிது தமிழ் கற்றவர்களையும் மகிழ்விக்கும். தமிழில் செய்யுள் வடிவிலுள்ள ஒரேஒரு சிறந்த நாடக நூல் மனோன்மணீயமாகும். இருபதாம் நூற்றாண்டில் எழுந்த பாரதியின் பாடல் நூல்களும், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை கவிதை நூல்களும், பாரதிதாசன் கவிதை நூல்களும் புதுவழியில் அமைந்தவை; இலக்கியச்சுவை யுடையவை. இவையன்றிப் பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல், திருவருட்பா, இரட்சண்ய யாத்திரிகம், சீறாப்புராணம் முதலியனவும் உண்டு. பல்வேறு புலவர்கள் பாடிய தனிப்பாடல் திரட்டு நூல்கள் உள. இவை ஓய்வு நேரத்தில் வேடிக்கையாகப் படிக்கத்தக்கவை.

ஒருவர் மேற்குறித்த அத்தனை நூல்களையும் படித்துவிட முடியாது; படிக்கவும் வேண்டுவதில்லை. புலமை கருதினால் இவற்றை எல்லாம் படிக்கலாம். அத்தனை நூல்களையும் படித்தபுலவர்கள் எத்தனை பேர்கள் இருக்க முடியும் என்று எண்ணுகிறீர்கள்? அத்தனை நூல்களையும் கற்றவர்கள் மிகமிகக் குறைவானவர்கள்; விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள். கம்பராமாயணத்தை முழுதும் படித்தவர்களே மிகக் குறைவானவர்கள். சங்க இலக்கியங்கள் அத்தனையும், ஒருமுறையாவது படித்தவர்களும் குறைவானவர்களே. இந்நிலை என்றும் இருந்த நிலைதான்; இன்றுமட்டுமுள்ள நிலையல்ல. ஆதலால், தமிழிலக்கியம் கற்க விரும்புகிறவர்கள் அத்தனை நூல்களையும் படிக்க ஆவல்கொள்ள வேண்டுவதில்லை; ஒரு சில நூல்களைக் கற்று இன்புறுதல் போதுமானது. நாலடியார் கூறுவதைப் பாருங்கள்:

"கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல;—தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீர்ஒழியப்
பால்உண் குருகின் தெரிந்து."

நாலடியார் என்ன கூறுகிறது? அது நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்குமாறு நமக்கு அறிவுறுத்துகிறது. அது ஏற்றுக்கொள்ளத் தக்கதே.

ஒருவர் லண்டன்மா நகரத்து நூலகத்தில் இருக்கும் எல்லா நூல்களையும் மேற்போக்காகப் படிக்கிறதைப் பார்க்கினும், ஒரு சில நூல்களை மட்டும் தேர்ந்தெடுத்து நன்முறையில் ஆய்ந்து கற்பது நல்லது என்று ஆங்கில அறிஞர் ஜான் ரஸ்கின் என்பவர் தமது "சீசேம் அண்டு லில்லீஸ்" (Sesame and Lillies) என்ற ஆங்கிலச் சொற்பொழிவு நூலில் வற்புறுத்திக் கூறியுள்ளார். மேலும் அவர், சொற்களை ஆய்ந்து கற்கவேண்டும் என்றும், கற்பவர் தம் கருத்தைக் கற்கும் நூலில் புகுத்திப் பொருள் காணலாகாது என்றும், அறிவுரை கூறியுள்ளார். வள்ளுவரும் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே, "கற்க கசடறக் கற்பவை" என்றும், "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி போன்று மாந்தர்க்குக் கற்றனைத்து அறிவு ஊறும்" என்றும், 'நவில் தொறும் நூல் நயம்' காணலாம் என்றும், 'ஆழ்ந்து படிக்கும் பொழுது தான் முன்னே இந்நயத்தைக் காணவில்லை என்று அறியாமை தோன்றும்' என்றும் தெள்ளத் தெளியக் கூறியுள்ளார்; கற்கும் வழியையும் காட்டியுள்ளார். இம்முறையில் செம்மையாக ஒருவர் கற்க வேண்டுமென்றால் பலநூல்களைக் கற்கமுடியுமா? ஒரு சில நூல்களை மட்டுமே கற்க முடியும். அகல உழுவதைக் காட்டிலும் ஆழ உழுவது நல்லதல்லவா? ஆழ உழுதால் விளைச்சலும் மிகுதியாகவே இருக்கும்.

தமிழிலக்கியம் கற்பதில் இருவகைநோக்குகள் உண்டு: ஒன்று, தமிழ்ப் புலமை நலம் அடையக் கற்பது; மற்றொன்று ஓய்வு நேரத்தில் பொழுது போக்குக்காகப் படித்து இன்புறுதற்காகக் கற்பது. ஓய்வு நேரத்தில் உரைநடை இலக்கியங்களாகவுள்ள சிறுகதை, நெடுங்கதை, கட்டுரை இவற்றைப் படிக்கலாம். ஆனால், இவை செய்யுளைப் போல் நிலையான இன்பத்தைத் தரவல்லன அல்ல. செய்யுள் இலக்கியங்களைப் படிப்பதால் உண்டாகும் இன்பமே உயர்ந்த இன்பமாக இருக்கும். கதைகளின் இன்பம் கணநேர இன்பமே. இதனால், சிறுகதைகளையும் நெடுங்கதைகளையும் வரலாறுகளையும் கற்க வேண்டுவதில்லை என்று

சொல்லவில்லை. நிலைத்த இன்பத்தைத் தரவல்லது செய்யுட்களையே என்பதுதான் கூறுவது.

தமிழ்ப் புலமைக்குக் கற்பதென்றால் கல்லூரியில் சேர்ந்து இலக்கிய இலக்கணங்களைக் கற்கவேண்டும்; இல்லாவிட்டால் ஓர் ஆசிரியனை அடுத்துச் சில ஆண்டுகளாயினும் முறையாகப் பாடங் கேட்கவேண்டும். ஆதலால், நான் புலமை நோக்குக்குரிய முறையை விடுத்து, இன்ப நோக்குக்காகத் தமிழிலக்கியம் கற்பதற்குரிய முறையை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். புலமை நோக்குக்கும் இம்முறை ஓரளவு ஏற்றதே.

முதலாவது உண்மையான தமிழ்ப்பற்றுக் கொள்ள வேண்டும். உண்மைத் தமிழ்ப் பற்றுண்டானால் அது தமிழிலக்கியம் கற்க ஆர்வத்தையும், முயற்சியையும், அதற்கேற்ற வழியையும் உண்டாக்கி விடும். "அருமையுடைத்து என்று அசாவாமைவேண்டும்; பெருமை முயற்சி தரும்'' என்பது பொய்யாமொழியல்லவா? இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்கவேண்டும்: பெருமை அதைச் செய்வதற்குத் தக்க முயற்சியை உண்டாக்கி விடும். முயற்சியுடையார் ஒருநாளும் இகழ்ச்சி படையார். முயற்சியால் முடியாதது மூதலகில் இல்லை. முயற்சியோடு தன்னம்பிக்கையும் வேண்டும்.

இரண்டாவது கற்கத் தொடங்கும் பொழுதே ஆராய்ச்சியில் நுழைந்து விடக்கூடாது. திருக்குறளில் கடவுள் வாழ்த்து இடைச்செருகல் என்று தொடங்கி விட்டால் உருப்பட முடியாது. இதனால், மனிதன் சிந்திக்க வேண்டுவதில்லை என்று சொல்வதாகாது. சிந்திப்பவன்தான் அறிவுடையவன். ஆனால், படிக்கும்பொழுதே ஆராய்ச்சிச் சிந்தனையில் இறங்கிவிட்டால் அறிவு வளராது. கற்றுத்துறை போகிய பின்பு ஆராய்ச்சியில் இறங்கலாம். ஆராய்ச்சிகள் பலவற்றைப் படித்துவிட்டு மனத்தை அலையவிடக் கூடாது. படிக்கும் நூலின் பொருளை முன்னும் பின்னும் முரண்படாது தெரிந்துகொள்ள வேண்டுவது முதல்

வேலை. அடிப்படை இல்லையென்றால் கட்டடம் இடிந்துவிடும். ஆராய்ச்சி என்பது சறுக்கு நிலம். ஆளுக்குத் தக்கவாறும் அறிவுக்குத் தக்கவாறும் ஆராய்ச்சிகள் வேறுபடும்; மாறுபடும். சமயக்காழ்ப்பும் மதப்பற்றும் மிகுத்திருப்பதாலும், கருத்து வேறுபாட்டிற்கு மதிப்பளிக்காது வெறுப்புக்காட்டும் இழிநிலை இருப்பதாலும், போதிய சான்றுகள் மேலும் வெளிவர வேண்டியிருத்தலாலும், இதுவரை வந்துள்ள ஆராய்ச்சிகள் முற்ற முடிந்தவை அல்ல. ஆராய்ச்சிகள் புத்தம் புதிதாக ஆயவேண்டுவனவும் உண்டு. ஆதலால், இன்பத்துக்காக இலக்கியம் கற்போர் முதன்மையாக அதன் பொருள் நயம் பிறநயம் இவற்றில் உள்ளத்தைச் செலுத்துவது நன்று என்று சொன்னால் தவறாகாது என்று கருதுகிறேன். ஆராய்ச்சிசெய்வது தவறல்ல. அறிஞர் பெருமக்கள், ஆராய்ச்சி வல்லுநர்கள் அதைச் செய்தலே நல்லது.

மூன்றாவது தக்கதொரு தமிழிலக்கியத்தைத் தேர்ந்தெடுத்து ஆர்வமுடன் கற்பது சிறப்புடையது. தேர்ந்தெடுப்பது எளிதல்ல; மிகவும் கடினமானது. ஒருவர் பெரியபுராணமே தலைசிறந்தது என்பார்; மற்றொருவர் கம்பராமாயணமே இன்புறுதற்கேற்ற இனிய இணையற்ற காப்பியம் என்பார்; இன்னொருவர் நளவெண்பாதான் இனியதொரு நல்லசெய்யுள் நூல் என்பார். இங்ஙனம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நூலைப் போற்றித் தலைசிறந்த இலக்கியமாகக் கூறும்பொழுது அதைக் கேட்பவன் பல மரத்தைக் கண்ட தச்சன் ஒரு மரத்தையும் வெட்டாது திரும்பிவந்த கதைபோலாகநேரும். எல்லா மொழிகளிலும் எல்லா நூல்களும் தலைசிறந்த நூல்களாக இருப்பது முடியாது; அப்படி இருப்பதும் இயற்கைக்கு மாறுபட்டது. எனவே, ஒரு சில நூல்களைப் பற்றிக் குறிப்பாகத் தெரிந்துகொள்வது தேர்ந்தெடுப்பதற்கு ஓரளவு துணைசெய்யக் கூடும்.

சங்க நூல்களை எடுத்துக் கொள்வோம். பத்துப்பாட்டு தமிழக வரலாற்றுக்கு மிகவும் பயன்படுவது; கடின நடையுடையது; மொழித்

தேர்ச்சியுள்ளவர்களுக்கு இன்பமளிக்கக் கூடியது. எட்டுத் தொகை நூல்களுள் புறநானூறும் குறுந்தொகையும் கலித்தொகையும் முயன்றுபடித்தால் இன்பமளிக்கத் தக்கவை; மற்ற ஐந்து நூல்களும் ஆராய்ச்சிக்கும் புலமைக்கும் பயன்படுபவை. இவற்றுள் ஒரு சில பாக்கள் இனியனவாக இருக்கும். நற்றிணை எல்லோருக்கும் இன்ப மளிக்கக் கூடியதாக இராது. பதிற்றுப்பத்து, சங்க காலத்தில் சேர நாட்டை ஆண்ட சேரமன்னர்களைக் குறித்துத் தெரிந்து கொள்வதற் குரிய நூல். பழந் தமிழ்நாட்டை அறிந்துகொள்ளப் புறநானூறு உதவும். குறுந்தொகை இனிய எளிய அகத்திணைப்பாக்களால் அமைந் தது. பதினெண் கீழ்க்கணக்கில் திருக்குறள் ஒன்றே ஒப்புயர்வற்று விளங்குவது; வாழ்க்கைக்கு வழி காட்டுவது; ஆயுட்காலம் முழுதும் ஆழ்ந்து படிக்கவேண்டுவது; உலகப் பொதுமறையாக இலங்குவது. இது கவிதைச் சுவை மிக்கதல்ல; நம்மை வாழ வைக்கும் அறிவுக் களஞ்சியம்; அறத்தின் கருவூலம்; அணையாத திருவிளக்கு. இதில் சிறிது கவிதை இன்பம் காணலாம்; பெரிதும் காண முடியாது; காண இடமில்லை; காணுவதும் தவறு. திருவள்ளுவரின் நோக்கம் கவிதைச் சுவையைக் காட்டி மக்களை மகிழ்விப்பதல்ல; வாழ்க்கைக்கு வழிகாட் டித் திருத்துவதே யாகும். நாலடியாரில் சில நல்ல கருத்துள்ளவை உண்டு. பழமொழி படிக்க இனியதாய் இராது. நான்கு ஐந்திணைகளும் கார் நாற்பதும் கைந்நிலையும் காதல் கற்பு வாழ்வை நவில்பவை. இவற் றுள் கவிதைச்சுவையைச் சிற்சில பாக்களில் கண்டு இன்புறலாம். களவழி நாற்பது போரை வருணிப்பது. மற்றவை, அறக்கருத்துக் களைக் கூறும் சிறுசிறு நூல்களே.

முப்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரம் நெஞ்சை யள்ளும்; மணிமேகலை நெஞ்சை அள்ளாது; சிந்தாமணி பலவிதக் காப்பியச் சுவை யுடையதாயினும் எளிதாய்ப் படிப்பதற்குரியதல்ல. ஐஞ்சிறு காப்பி யங்கள் படிக்கவேண்டுவன அல்ல; படித்தின்புறுதற் குரியனவும் அல்ல; புலமைக்குப் படிக்கவேண்டுவன. இனிய தேவாரப் பாக்கள்

படிப்பதற்கு எளிதாய் இரா; திருவாசகம் உள்ளம் உருக்கும் பாடல்களை உடையது. நாலாயிரத் திவ்யபிரபந்தம் பக்திச் சுவை மிக்கது. கம்பராமாயணம் இராமவதாரக்கதையைக் கூறுவதாயிருப்பினும், பல்லாண்டுகளாக எச்சமயத்தாரும் விரும்பிப் பயின்றுவரும் கவிதைப் பூங்கா. பக்திச்சுவையுடையது பெரியபுராணம். செய்யுள் இனிமையுடையது திருவிளையாடற்புராணம். கலிங்கத்துப் பரணி என்பது ஒரு போர்ச் சிறு காப்பியம்.

பிற்கால இலக்கியங்களுள் திருவேங்கடத்தந்தாதி, மீனாட்சியம்மன் குறவஞ்சி, குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, தமிழ் விடு தூது, தஞ்சைவாணன் கோவை, திருவரங்கக் கலம்பகம், மூவர் உலா இவை படிக்கத் தகுந்தவை. தமிழில் உள்ள ஒரே ஒரு செய்யுள் நாடகம் மனோன்மணீயம். இது சிறிது கடினமானதே. பாரதியார் பாடல் நூல்களும் கவிமணி செய்யுள் நூல்களும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதை நூல்களும் எளிதாகப் படிக்கக் கூடியவை. உரைநடை இலக்கியங்களைக் குறித்துச் சொல்லும் நோக்கமின்மையால் அதை விடுத்துச் செல்கிறேன்.

இலக்கியம் படித்து இன்புற விரும்புகிறவர்கள் மேற்சொன்னவற்றுள் மனத்துக்கு ஏற்றவற்றைத் தேர்ந்தெடுத்து முறையாகப் படிக்க வேண்டும். முதலில் சந்தியிலக்கணம் கற்றுப் பாடல்களைச் சந்திபிரித்துப் படிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி ஆகிய இச் சிறு நூல்களை ஒருமுறை எளிதாகப் படித்து விடலாம். பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் சிறு நூல்களைப் படிக்கலாம். ஏதாவது உரையுள்ள ஓரிரண்டு அந்தாதிகள் படிக்கவேண்டும். தமிழக வரலாற்றைப் படித்தால்தான் நாட்டுநிலையும் நாட்டு நிலையில் இலக்கியம் தோன்றிய நிலையும் விளங்கும். வரலாறும் இலக்கியமும் இரட்டைச் சகோதரிகள். வரலாறு தெரிந்து இலக்கியம் படிப்பது அறிவியல் முறைக்கு ஏற்றது. சங்ககால அரசியல் முறை

அறிந்தால், எண்பேராயம் ஐம்பெருங்குழு இன்னவெனத் தெரிந்து கொள்ள முடியும். பிற்காலச் சோழர்களைப் பற்றித் தெரிந்தால்தான், கலிங்கத்துப் பரணி, மூவர் உலா இவை நன்கு விளங்கும். திருக்குறளில் கூறப்பட்டுள்ள நட்பு பொதுவாகக் காணப்படினும், அது அரசர் நட்புக்குக் (allies) கூறப்பட்டதெனச் சங்கவரலாற்றை அறிந்தார் நன்கு உணரலாம். தமிழக வரலாறுகள் இன்று உரைநடையில் வந்துள்ளன. சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுப்பேராசிரியர் டாக்டர். மு. ஆரோக்கியசாமி அவர்கள் எழுதியுள்ள 'நாம் இருக்கும் நாடு' என்னும் நூல், தமிழ் நாட்டு வரலாற்றை அன்று முதல் இன்று வரை கூறுவது. இது மிகவும் பயன்படும். சீனிவாச பிள்ளை அவர்களின் தமிழ்வரலாறு, ஓரளவு தமிழிலக்கியவரலாற்றையும் இலக்கியங்களின் காலத்தினையும் தெரிந்துகொள்ள உறுதுணையாயிருக்கும்; நம்பிப் படிக்கத் தக்கதுமாகும். சேர சோழ பாண்டியர் வரலாறுகள் வேறு சில உள்ளன. அவற்றையும் படிக்க வேண்டும். இந்நிலையில் தமிழக வரலாற்றைத் தெரிந்து அறிவியல் முறையில் தமிழிலக்கியங்களைக் கற்பதற்கு முன்னறிவு நன்னிலையில் உண்டாகும். தமிழகச் சமயங்களான சைவம், வைணவம், சமணம், பௌத்தம் இவற்றையும் ஓரளவு தெரிந்துகொள்ள வேண்டும். இச் சமயங்களைக் குறித்து அறியவிட்டால் தமிழ் இலக்கியக் கருத்துக்கள் சிலவற்றை நலமுறப் புரிந்து கொள்ளுதல் அரிது. இலக்கியமும் சமயமும் இணைந்துள்ள சிறப்பே பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலும் உள்ள இலக்கியங்களில் காணப்பது. இது இந்திய நாட்டு மொழி இலக்கியங்களுக்கே உரிய பண்பு. ஆங்கில அறிஞர், ஹால்டேன் பிரபு, 'தத்துவமும் இலக்கியமும் இணைந்துள்ள சிறப்பு இந்திய இலக்கியங்களுக்குண்டு' என்று பாராட்டுகின்றார். இது இலக்கியத்துக்குள்ள நிறைவுமாகும்; குறைவுமாகும். இந்நாட்டில் சமயங்களே தலைசிறந்த இலக்கியங்களை ஈந்தருளின என்பது மறுக்கமுடியாத உண்மை. விரிப்பிற் பெருகும். ஆங்கிலத்தில் உள்ள

'வீட்டுப் பேறிழவு' (Paradise Lost) இந் நிலையில் தோன்றியதே. சமய இலக்கியங்களைப் படிக்க வெறுப்புக் கொள்ளலாகாது; சமயங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதிலும் அருவருப்புக் காட்டுதல் கூடாது. எந்தச் சமயத்தைக் குறித்தும் தெரிந்து கொள்ளலாம்.

சங்க நூல்களைக் கற்க விரும்புகிறவர்கள் அகத்திணை புறத்திணை இலக்கணங்களை ஓரளவாவது அறிந்துகொள்ளவேண்டும். அப்பொழுது தான் வஞ்சித்திணை என்றால் இன்னது என்றும், காஞ்சித்திணை என்றால் இன்னது என்றும் பாடாண்திணை என்பது இது என்றும், தெரிந்துகொள்ள முடியும். அகத்திணை படித்தால்தான் 'வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதல்' என்பது விளங்கும். காதல் வாழ்வும் கற்பு வாழ்வும் அகத்திணை எனப்படும். போர் வாழ்வும் பிறவும் புறத்திணை எனப்படும். காதல் வாழ்வைக் களவு என்றும், மணந்து வாழும் வாழ்வைக் கற்பு வாழ்வு என்றும் கூறுவர். போர், கல்வி, கடவுள் வாழ்த்து, ஆட்சிமுறை, அரசனைப் புகழ்ந்து பாடுதல் இன்னபிற புறத்திணை என்பர். இக் காலத்தில் இருதிணைகளைப் பற்றி விரிவாக விளக்கும் உரைநடை நூல்கள் உள்ளன. அவற்றைப் படித்தாலே போதுமானது. இவ் விரண்டையும் படித்துவிட்டால் ஓரளவு கண் திறந்துவிட்ட நிலை ஏற்படும். விரிவாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள் நம்பியகப்பொருளையும் ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையும் படிக்கலாம்: இவ் வறிவு சங்க இலக்கியக் கோயில்வாயிலைத் திறக்கும் திறவுகோலாகும்; பிற்காலக் கோவை இலக்கியங்களை நன்கு கற்றுப் புலமைபெற வேண்டுமெனில், தொல்காப்பியப் பொருளதிகாரம் இன்றியமையாதது.

மிகச் சிறிய அளவு யாப்பிலக்கணமும் தெரியவேண்டும். பாடல் இயற்றத் தேவையில்லை; தெரிந்தால் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போலாகும். பாடல் பாடத்தெரிந்தவர் பாடலைச் சுவைக்க

அறிந்து கொள்வர். 'பாம்பறியும் பாம்பின கால்' என்பது பண்டைப் பழமொழியல்லவா? கவிபாடத் தெரிந்தவனே கவிஞனை உணரமுடியும். இல்லை யென்றால் வெண்பா இன்னவாறு இருக்கும், ஆசிரியப்பா இப்படி யிருக்கும், விருத்தப்பா இங்ஙனம் அமையும் என்னும் அடிப்படை இலக்கணத்தையாவது தடையின்றித் தெரிந்து கொள்வது போதுமானது. புறநானூறு பெரும்பாலும் ஆசிரியப்பாவால் அமைந்த நூல்; பத்துப்பாட்டு என்பது நூறு அடிகளுக்கு மேற்பட்டிருக்கும் நீண்ட பத்து ஆசிரியப்பாக்களைக் கொண்டது. பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் பலவகை வெண்பாக்களால் ஆனவை. குறள்வெண் பாவால் இயற்றப்பட்டது திருக்குறள். கம்பராமாயணம் பலவகை இனிய விருத்தங்களால் இயன்ற காப்பியம்; முத்தொள்ளாயிரம், நள வெண்பா ஆகிய இவை நல்ல இனிய வெண்பாக்களால் ஆனவை. கலிங் கத்துப் பரணியோ தாழிசை என்னும் ஒருவகைப் பாவால் பாடப்பட் டது. இப்படித் தெரிந்துகொண்டாலும் போதும். அப்பொழுதுதான் இன்ன இன்ன பாட்டை இன்ன இன்ன முறையில் படித்து இன்புற வேண்டும் என்று தெரிந்து உணர்ந்து படிப்பது முடியும்.

•

இனி, படித்தின்புற வேண்டும் என்று விரும்புகிறவர் எதைத் தேர்ந்து படிப்பது என்னும் கேள்வி எழுகிறது. இதைத்தான் படிக்க வேண்டும் என்று சொல்லுவது தவறு. அவரவர் தத்தம் மனப்போக் குக்கும் மொழித்தேர்ச்சிக்கும் தக்கவாறு ஏதாவது ஒரு நூலையோ சில நூல்களையோ படித்தின்புறலாம். பாரதியார் குறிப்பிட்டவை திருக் குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆகும். நான் அவரைப் பின் பற்றியே கீழ்வரும் இலக்கியங்களைக் குறிப்பிடுகிறேன்.

1 திருக்குறள்
2 சிலப்பதிகாரம் அல்லது கம்பராமாயணம்
3 பாரதியார் கவிதை நூல்

திருந்திய வாழ்க்கை வாழ்வதற்கும், கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டும் அற்புதத்தைக் காண்பதற்கும், மனப்பண்பு எய்துவதற்கும் அருமறையாக, உலகப் பொதுநூலாக, முக்காலத்துக்கும் ஏற்ற திருநூலாக இலங்கும் ஒருநூலாம் திருக்குறளை வாழ்நாள் முழுதும் படிக்கலாம். கவிதை இன்பத்தை நுகர்வதற்கு, காப்பியச் சிறப்புக் காண்பதற்கு, பண்டைத் தண்டமிழ் நாட்டின் ஒண்கலை நிலையை உணர்வதற்கு, பெண்ணின் மேன்மை தெரிவதற்குச் சிலப்பதிகாரத்தைத் தேர்ந்தெடுத்துப் படிக்கலாம். சிலப்பதிகாரம் தமிழகத்துக் கதையைக் கூறும் முதற் பெருங்காப்பியம்; நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதியாரால் பாராட்டப் பட்டது; படிக்கப் படிக்கச் சுவை மிக்கது. இந் நூலில் காணப்படும் ஒரே ஒரு குறை உண்டு. அது ஊழ்வினையை அளவுகடந்து வற்புறுத்துவதுதான். கம்பனது காவியமோ மிக விரிந்தது; பெருமுயற்சி செய்து படிக்கவேண்டுவது; வாழ்நாள் முழுதும் விழுமிய கவிதை இன்பம் அளிக்கவல்லது; கற்பனைக் களஞ்சியமாக, கவிதைச் சோலையாக, கலைக் கோயிலாக உள்ளது. இம் மாபெருங் காப்பியத்தில் குறைகூறுவது கதையைக் குறித்ததே. கற்பனைக் கதையைக் குறித்துக் கவலைப்பட வேண்டுவதில்லை; அதில் கற்பனையின் அற்புத நடனத்தையும், தெவிட்டாத கவிச் சுவையினையும் கலைமுகட்டில் நிற்கும் கலைச் சிறப்பினையும் கண்டு கண்டு களித்தின்புற வேண்டும். உலகப் பெருங்காவியங்களுள் ஒன்று கம்பனது காவியம் என்றும், வடமொழி முதற்காவியத்தினும் பலவகையில் சிறந்து விளங்குவது கம்பராமாயணம் என்றும் உலகக் காப்பியங்களைக் கற்றறிந்த மாமேதை வ. வே. சு. ஐயரவர்கள் நடுநிலையாக எடுத்துக் கூறியுள்ளார்கள். பாரதியார் கவிதை நூல்கள் இக் காலக் கருத்தையும் கவிதைப் பண்பையும் சுவைப்பதற்கு ஏற்றவை; எளிதாகப் படிக்கத் தக்கவை; புதுமுறையில் அமைந்தவை.

நூலைத் தேர்ந்தெடுப்பது படிப்பவர் உரிமை. படிப்பவர்கள் பிறர் கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமேயன்றிப் பலர் சொல்வது கேட்டுக் கலங்குதல்கூடாது. பிறர்கூறுவதில் உண்மையுண்டா என்று பார்த்துப் படித்துப் பிடித்தநூலைத்தேர்ந்தெடுத்து அடுத்து விடாப் பிடியுடன் விரும்பிக்கற்று இன்புறவேண்டும். தேர்ந்தெடுத்துப் படிப்பதிலேதான் இன்பமுண்டு. பேக்கன் என்ற ஆங்கில அறிஞர், "சில நூல்கள் சுவைக்கப்படவேண்டும்; மற்றவை விழுங்கப்பட வேண்டும்; ஒரு சில நூல்கள் மென்று நன்று சீரணிக்கப்படவேண்டும்" என்று கூறிய பொன்மொழி கற்போர் உள்ளத்தில் நின்று நிலவ வேண்டும். இங்ஙனம் பேக்கன் கூறியதில், நூல்களைக் கற்கும் முறையும் அமைந்திருக்கிறது. ஒருவர் ஒரு மொழியிலுள்ள எல்லா நூல்களையும் படிக்க முடியாது. பயனற்ற பல நூல்களைப் படிப்பதில் பயனுண்டா? இல்லையே. ஆதலால், தலைசிறந்த நூல்களைப் படித்தின்புறுவதே அறிவுடைமை. ஒருசில நூல்களை முற்றும் படிக்காமல் அவற்றின் சிற்சில பகுதிகளைக் கற்றல் போதுமானது. ஒரு சில நூல்களை ஒரு முறை முழுதும் படித்தல் சாலும். ஒரு சில நூல்களை மட்டும் அக்கறையுடனும் முழுக் கவனத்துடனும் முழுதும் எழுத்தெண்ணிக் கற்கவேண்டும். இக் கருத்தைத்தான் பேக்கன் சுருங்கக் கூறிப் படிப்பதற்கு வழிமுறையைத் தக்கவாறு வகுத்துத் தந்தார். அவர் கூறியது ஆழ்ந்த அனுபவத்தின் பயனாகும். இதுவே பலரும் தமிழிலக்கியத்தைக் கற்றின்புறுதற்கு ஏற்ற முறையுமாகும்.

பாக்களைப் படிக்கும் பொழுது பொருளைப் பற்றி முதலில் பெரிதும் கவலை கொள்ளாது, பாட்டில் தோய்ந்து படிக்கத்தொடங்கினால், பெரும்பாலான பாக்கள் விளங்காமல் இரா. இராமலிங்க அடிகள் பாக்களைப் படித்தின்புற்று அனுபவித்த அனுபவத்தைக் கீழ்வரும் அவருடைய பாடல்கள் நமக்கு இயம்புகின்றன. பாடலைப் பாருங்கள் :

"தேன்படிக்கும் அமுதா,உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதுஎன்னை நான் அறியேன்; நாஒன்றோ.
ஊன்படிக்கும்; உளம்படிக்கும்; உயிர்படிக்கும்; உயிர்க்குயிருந்
தான்படிக்கும்; அனுபவங்காண், தனிக்கருணைப் பெருந்தகையே!"

"வான்கலந்த மாணிக்க வாசக,நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே."

அடிகளார் தாம் விரும்பிய பாடலை நாள்தோறும் படித்தார்; அப்பாட்டுணர்வில் படிந்து தோய்ந்து தம்மை மறந்து படித்தார்; இன்பம் அடைந்தார். இது அவரது அனுபவம். இதுதான் தனிமையிலே இனிமை பெறக் கற்பாரும் கைக்கொள்ள வேண்டுவதாகிய இனிய முறை. இங்ஙனம் பாட்டைப் படிப்பதுதான் இன்பம் பெறுதற்குரிய வழி.

கவிதை இன்பமே இன்பம். கவிதை கடவுளைப் போல விளக்க முடியாதது. "கற்பனையின் வெளியீடே கவிதை" என்றார் ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி என்பார். "முன்சிந்தித்த சிந்தனைகளைப் பின் நினைவுக்குக் கொண்டுவந்து, அமைதியான நிலையில் வடித்துக் கொடுப்பது கவிதை" என்றார் இயற்கை யழகைப் பாடிக் குவித்த எழிற் கவிஞர் வொர்ட்ஸ்வொர்த் என்பார். "முற்றப் பெற்ற வடிவத்தில் மகிழ்ச்சி தோன்ற வெளியிடுவதே கற்றற்குரிய கவிதை" என்றார் ஆங்கில மேதை மேத்யூ ஆர்னல்ட். ஆலன்போ என்பார், "இன்னிசையோடு கூடிய அழகின் படைப்பே இனிய கவிதை" என்றார். ஜான்சன், "கவிதை என்பது இசைக் கருத்து" என்றார். கம்பர் பெருமான், "ஐந்திணை அளாவி தெளிவு மிக்கதாய் ஆற்றொழுக் குடையதாய் அமைவது கவிதை" என்று பாடினார்; "தீஞ் சொல்லால் ஆவது கவிதை" என்றும் கூறினார். தேசியக் கவிஞர் பாரதியார், "அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை" என்றும், "பாட்டினிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இவை இருக்கவேண்டும் என்றும் தமதுகட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இக் கருத்துக்கள் எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் கவிதையின் பல்வேறு தன்மைகள் நன்கு புலனாகும்.

சிறந்த கவிதை நூல் வள்ளலார் கூறியவாறு நம்மை மறக்கச் செய்யும்; நம்மை அறியாது நமக்கு உணர்ச்சி ஊட்டும். இக் கருத்தை உள்ளத்தில் இருத்தி நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்தால், ஓய்வு நேரத்தில் இனிய இன்பத்தை, பிறவகையில் அடையமுடியாத இன்பத்தை அடையலாம்.

எந்தக் கவிஞரையும் எடுத்தஎடுப்பில் குறைகாணுமாறு படித்தலாகாது; இது முடித்துச் சிந்தித்து முடிவுகட்ட வேண்டுவது. குறைகூறும் முறையில் படிக்கத் தொடங்கினுல், எடுத்த இடமனைத்தும் குறையாகவே இருக்கும். ஆதலால் நூலைக் குறைகாணுது நிறைவுள்ளதாக நினைத்து மதித்துப் படிக்க வேண்டும். எடுத்த நூலிலே அழகு காண, இனிமை காண, நயம்காண முனையவேண்டும் இவ்வகையிலே ஒருவர் ஒரு நூலைப் படிக்க வேண்டுமேயன்றிக் குற்றம் காணும் முறையில் படித்தல் கூடாது. நன்னம்பிக்கையோடும் ஒரு நூலைப் படிக்க வேண்டும்; 'என்ன இது புரியுமா?' என்று தன்னம்பிக்கை இழந்து படித்தலும் கூடாது; தேர்ந்தெடுக்கும் பொழுதே ஏற்றதாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுத்ததைப் பொறுமையோடும் படிக்கவேண்டும்; அருமையான இன்பத்தை அடையலாம்; யாருக்கும் கிடைக்காத அணையாத மகிழ்ச்சியை எய்தலாம்.

செய்யுள் இலக்கியத்தையே படித்துக்கொண்டிருந்தாலும் வெறுப்புண்டாகும். அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சாகுமல்லவா? ஆதலால், இடையிடையே ஒரு சிறு கதை, ஒரு தாலாட்டு வரலாறு, ஒரு நெடுங்கதை, ஓர் உண்மை வரலாறு இவற்றையும் படிக்கவேண்டும். அப்பொழுதுதான் மூளைக்கு அயர்ச்சி இல்லாதவாறு மாற்றம் ஏற்படும். மாற்றம் இன்பத்தைப் பெருக்கும் மருந்தாகும்.

நூல்களைக் கடன்வாங்கிப் படிப்பது நல்லதல்ல. சொந்தமாக நூல்களை வாங்கி வைத்துக்கொண்டு படிக்க வேண்டும். சொந்தமாக உள்ள நூல்களில் எந்தவிதமான சிறு குறிப்புக்களையும் எழுதி வைக்க

லாம்; சிறந்த அடிகளைக் கோடிட்டு வைக்கலாம். கடன் வாங்கிப் படிக்கும் நூல்களில் அப்படிச் செய்தல் எப்படி முடியும்? ஆதலால் வீட்டில் சொந்தமாக நூல் நிலையம் இருக்கவேண்டும் என்பது. நல்ல நூல்கள் அதில் முந்நூறுவது இருப்பது நன்று. ஒரு நிலப்படம், ஒரு தமிழகராதி இவை கட்டாயம் இடம்பெற வேண்டும். கற்றவர் என்றால் அவரிடம் 3000 நல்ல நூல்கள் சொந்தமாக இருக்கவேண்டும் என்று ஆங்கில அறிஞர் பட்டீசன் கூறினர். சொந்த நூல் நிலையம் குடும்பச் சொத்தாக, கலைவளர்க்குங் கருவியாக, குடும்பத்தை உருவாக்கும் திருவாக அமையும். மிதி வண்டி ஒன்றிருந்தால் தம்பிமார்களும் தனயர்களும் அதனைப் பயன்படுத்திக் கற்றுக்கொள்கிறார்கள். அதுபோல வீட்டில் நூல் நிலையம் இருந்தால், ஆண்களுக்கு மட்டுமல்லாமல் பெண்களுக்கும் படிக்க வாய்ப்பிருக்கும். நூல் நிலையத்தில் அறிஞர்கள் நூல்வடிவாகி இருந்து எந்தநேரத்திலும் வந்து உதவி செய்யக் காத்திருப்பார்கள். நள்ளிரவிலும் நாடிவந்து ஐயம் தீர்ப்பார்கள்; தேடிவந்து இன்பமளிப்பார்கள். எந்த நிலையிலும் நடுத்தரக் குடும்பத்தினர் சொந்தமாக முந்நூறு நல்லசிறந்த இலக்கியங்களை வாங்கி வைப்பது கடினமான செயலாகாது. மனமிருந்தால் வழியுண்டு. பண வறுமையினும் மனவறுமையே நூல்களை வாங்கத் தடையாகிறது எனலாம். சொந்த நூல் நிலையம் குடும்பப் பண்பாட்டை வளர்க்குஞ் சாதனம் என்றுணர்க.

தமிழக வரலாற்றை அறிந்து, அகத்திணை புறத்திணை இலக்கணங்களை ஓரளவு தெரிந்து, சந்திபிரிக்கப் பழகி, விரும்பும் இலக்கியங்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொருநேரத்தில் ஒவ்வொன்றாகத் தோய்ந்து படித்து வந்தால், தமிழிலக்கியம், ஒருவர்க்கு உண்மையில் இனிய இன்பத்தை அளிக்க முடியும் என்பது உறுதி. தமிழருக்கு இன்பம் தருவது அமிழ்தினும் இனிய தமிழிலக்கியமே என்று சொல்லவும் வேண்டுமோ?

* என்றுமுள தென்றமிழ்

திரு, டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப்பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

தமிழின் தோன்மை

நமது தாய் மொழியாகிய தமிழ் எக்காலத்தில் தோன்றியது? அதன் பழமை யாது? என்னும் வினக்களுக்கு மொழியாராய்ச்சியாளர் இதுகாறும் விடை காணவில்லே. இன்று உலகத்தில் பேசப்படும் மொழிகள் மூவாயிரத்துச் சில்லறையாகும். அவற்றுள் காலத்தால் முற்பட்டவை இரண்டே. ஒன்று சீன மொழி; மற்றொன்று நமது தாய்மொழியாகிய தமிழ். உலகப் பழைய மொழிகள் இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், வடமொழி, சீனமொழி தமிழ்மொழி (திராவிட மொழி) என்பன. இவற்றுள் இன்று பேச்சுவழக்கில் இருப்பன சீனமும் தமிழுமேயாம். இவ்வாறு பண்டை மொழிகளிலும் தமது தமிழ் முன்னணியில் நிற்கின்றது. தோன்றிய நாள் தொட்டு இன்றளவும் பேச்சு வழக்கில் இருந்து வருகின்றது. இத்தகைய பழமையையும் பேச்சு வழக்கிற் பெருமையையும் பெற்ற மொழியைத் தாய்மொழியாகப் பெற்றிருப்பவர் நாம் என்பதை எண்ணத் தமிழ் மக்கள் மெய்யாகவே மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைவார்கள் என்பது திண்ணம்.

இன்றுள்ள தமிழ் நூல்களுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் என்பதைப் பெரும்பாலோர் ஒப்புவர். அதனைச் செய்த தொல்காப்பியர், அந்நூலுள் ஏறத்தாழ 260 இடங்களில் தமக்குச் சமகாலத்தவரும், தமக்குக் காலத்தால் முற்பட்டவருமான தமிழ் இலக்கண ஆசிரியர் பலரைக் குறிப்பிட்டுள்ளார்.

"யாப்பென மொழிப யாப்பறி புலவர்"
"என்றிசி னோரே"
"என்மனார் புலவர்"
"நூலறி புலவர் நுவன்றிசி னோரே"

---

* இது யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை அப்பர்-திலகவதியார் கழகத்து ஆண்டு விழாவில் ஆற்றிய தலைமைப் பேருரை.

எனப் பலவாறு வரும் தொடர்கள் இவ்வுண்மையை உணர்த்தும். எனவே, தொல்காப்பியர் காலத்திலும் (ஏறத்தாழக் கி. மு. 3-ம் நூற்றாண்டிலும்) அதற்கு முன்பும் தமிழ் இலக்கணப் புலவர் பலரிருந்தனர் என்பதையும், அவர் தம் கருத்துக்களைப் பெரும்பாலும் தழுவியே தொல்காப்பியர் இலக்கண நூல் செய்தனர் என்பதையும் இத்தொடர்கள் நன்குணர்த்தும். இதனால் தொல்காப்பியர் காலத்தும் அவருக்கு முற்பட்ட காலத்தும் தமிழ் இலக்கண நூல்கள் பல இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகும். ஏறத்தாழக் கி. பி. 10-ம் நூற்றாண்டில் செய்யப்பட்ட யாப்பருங்கல விருத்தியுரையில், "தொல்காப்பியர் முதலிய ஒருசார் ஆசிரியர் இங்ஙனம் கூறுவர்"; "பெருங்காக்கை பாடினியார் முதலிய பிறிது ஒருசார் ஆசிரியர் இங்ஙனங் கூறுவர்;" என வரும் செய்தி மேற்சொன்ன உண்மையை உறுதிப்படுத்தல் காணலாம்.

ஏறத்தாழக் கி. மு. 3-ஆம் நூற்றாண்டிலும், அதற்கு முன்னும் தமிழ் இலக்கணநூல்கள் பல இருந்தன என்பது மேற்கூறிய உண்மைகளால் நன்கு தெளிவாகும். எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவது போல இலக்கியத்திலிருந்து எடுக்கப்படுவது இலக்கணம். எனவே, தொல்காப்பியத்திற்கு முற்பட்ட இலக்கண நூல்களுக்கு உறுகருவிகளாக இலக்கிய நூல்கள் பல இருந்திருத்தல்வேண்டும் என்பது அறிவுடையோர்க்கு நன்கு புலனாகும். பனையோலைகளில் எழுதப்பட்ட அந்நூல்கள் நாளடைவில் அழிந்திருத்தல் வேண்டும். தொல்காப்பியம் போன்ற பண்பட்ட இலக்கண நூல் செய்வதற்கு ஏற்ற இலக்கிய நூல்கள் மிகப்பலவாக நம் மொழியில் இருந்திருத்தல் இயல்பே. எனவே, கி, மு. 3-ஆம் நூற்றாண்டிற்கு முன்பு தோன்றிய இலக்கணங்களுக்குரிய இலக்கிய நூல்கள் மிகப் பலநூற்றாண்டளவில் செய்யப்பட்டனவாதல் வேண்டும் என்று கருதுதல் தகும்.

இத்தகைய இலக்கிய வளம் திடீரென்று ஏற்படுவதன்று. பண்டை மனிதர் பேசக் கற்று, எழுதக் கற்று, கருத்து வளர்ச்சியடைந்து முன்னேறுவதற்குப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆதல் வேண்டும் என்று மொழியாராய்ச்சியாளர் மொழிகின்றனர். இந்த உண்மையை நோக்க, நமது தாய்

மொழி எத்துணை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதென்று மெய்யாக வே கூறுதல் இயலாது. இந்த உண்மையை நன்குணர்ந்து, கல்வியிற் பெரிய கம்பர் "என்றுமுள தென்றமிழ்" என்று கூறினர்.

சங்க காலம்

இன்று நமக்குக் கிடைத்துள்ள சங்க நூல்கள் மிகச் சில. அவை எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன. எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் நூற்றுக்கணக்கான புலவர்களால் பல் வேறு காலங்களில்—பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடப்பட்டவை. அவற் றைக் கொண்டு அக்காலத் தமிழரசர், சிற்றரசர், வீரர், குடிமக்கள், இவர் களைப் பற்றிய விவரங்களை அறியலாம். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்க காலத்தின் இறுதிப்பகுதியில் செய்யப்பட்டவை. சங்க காலத்தின் முற்பகுதியை விளக்கும் தொகை நூற்பாடல்கள் பல. அவற்றால் சங்க காலத் தமிழ் மக்கள் இக்காலச் சாதிகளை அறியாதவர் என்பதையும், கோனாட்சி யில் தத்தம் தொழில்களைச் செய்துகொண்டு இன்புற்று வாழ்ந்தனர் என்ப தையும், வீரத்தையும் காதலையும் போற்றி வந்தனர் என்பதையும் அறிய லாம். மேலும் ஆடவர் பெண்டிர் என்ற வேறுபாடு இன்றி, சமுதாயத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற மாறுபாடு இன்றி, இன்னார் தாம் கல்வி கற்க வேண்டும் இன்னார் கற்றல் கூடாது என்ற வரையரையின்றி அனை வரும் கல்வி கற்றனர் என்பதை அறிந்து மகிழலாம். குயத்தி, காவற் பெண்டு போன்ற சாதாரண மகளிரும் கவிபாடும் ஆற்றல் பெற்றுத் தமிழ் வேந்தரால் மதிக்கப்பெற்றனர் என்பதைப் படிக்கும்பொழுது, பண்டைத் தமிழகத்துச் சமுதாய மேம்பாட்டினை நாம் உணர்ந்து மகிழ்கின்றோம்; அத் தகைய உயர்நிலை எப்பொழுது வரும் என்று ஏங்குகின்றோம்.

அதியமானிடம் அவைக்களப் புலவராயிருந்த ஔவையார் காஞ்சியை ஆண்ட தொண்டைமானிடம் அரசியல் தூதராகச் சென்று மீண்டார் என் பதை நோக்க, நமக்கு உண்டாகும் உள்ளக் கிளர்ச்சி சொல்லுந் தரத்ததன்று. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பெண்மணியை அரசியல் தூதாக

அனுப்பிய சங்ககாலத் தமிழனது பேரறிவினையும் முற்போக்கு உணர்ச்சியையும் என்னெனப் பாராட்டுவது? தேவை ஏற்படும்பொழுது மாமனுர் பெயரையும் கணவன் பெயரையும் தடையின்றிக் கூறலாம் என்பதைச் செயலில் காட்டிய கண்ணகி தேவியின் வழக்காடும் திறத்தையும், கற்பின் சிறப்பையும் நாம் எவ்வாறு பாராட்டப் போகிறேம்!

சங்க கால இசைத் தமிழின் சிறப்பினை எடுத்துக்காட்ட எண்ணற்ற புலவர் பாடல்கள் இருக்கின்றன. இசையின் சிறப்பை இனி துணர்த்தப் பாணரைப் பற்றிய செய்திகள் பல இருக்கின்றன. நாடகத் தமிழின் நலத்தினைக் காட்டக் கூத்தர், விறலியர் பற்றிய குறிப்புக்கள் பல சங்க நூல்களில் காணப்படுகின்றன. மாதவியின் அரங்கேற்று காதை விவரங்கள் மட்டுமே நமது நாடகத் தமிழின் சிறப்பை விளக்கப் போதுமானவை அல்லவா?

குடிமக்கள் ஒவ்வொருவரும் கல்விகற்றல் இன்றியமையாதது என்பதைப் பாண்டியன் நெடுஞ்செழியன் ஒரு செய்யுளாகப் பாடினன் என்ருல் தமிழ் மன்னன் கல்வித்துறையில் காட்டிய ஆக்கத்தினை நன்குணரலாம். "என் மேல் படையெடுத்துவரும் வேந்தரை வெல்லேனுயின், யான் கொடுங்கோல் வேந்தனென்று என் குடிகள் என்னைத் தூற்றுவாராக; மாங்குடி மருதன் போன்ற புலவர் பெருமக்கள் என் நாட்டைப் பாடாது ஒழிவாராக" என்று மற்ருெரு பாண்டியன் நெடுஞ்செழியன் கூறும் உறுதியிலிருந்து அவனது ஆட்சிப் பொறுப்பையும் புலவர்பால் அவன் வைத்திருந்த மதிப்பையும் நன் குணரலாம் அன்ருே? "இப்பகைவரை நான் வெல்லேனுயின், பொதுமகளிர் மார்பின்மீது என் மாலை துவள்வதாக," என்று சோழன் நலங்கிள்ளி கூறுரைப்பதிலிருந்து நாடாண்ட வேந்தனது நல்லொழுக்கத்தை நன்கறியலாமல்லவா? குடிகளைக் கண்ணும் கருத்துமாகக் காத்துவந்த இத்தகைய தமிழ் வேந்தரது ஆட்சியில் மக்கள் இன்புற்று வாழ்ந்தனர் என்பதில் ஐயம் உண்டோ?

புலவர் - பாணர் - கூத்தர் என்ற முத்தமிழ்ப் புலவரைக் காப்பதே தமது கடமை என்று எண்ணி, ஊர்களையும் உண்பொருள்களையும், செல்வப்

பொருள்களையும், வரையாது அளித்த வள்ளல்கள் சங்ககாலத்தில் வாழ்ந்ததாற்றான் முத்தமிழ், நாட்டில் முழக்கமிட்டது. ஆடவரும் பெண்டிரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். நாடு நாடாக விளங்கியது.

இடைக் காலம்

சங்ககாலத்தில் வடமொழிவாணர் மிகச்சிலராகவே தமிழகத்தில் வாழ்ந்துவந்தனர். அவர் கூட்டுறவாலும், ஒருசில பாகதச்சொற்களும், வடமொழிச் சொற்களும் தமிழிற் கலந்தன. அதனாற்றான் இச்சங்க நூல்களில் பிறமொழிச் சொற்கள் மிகச் சிலவாகக் காணப்படுகின்றன.

சங்க காலத்திற்கு (கி. பி. 300)-க்குப் பிறகு தமிழகத்தை ஏறத்தாழ 600 வருடகாலம் பல்லவர் என்ற வேற்று மரபினர் ஆண்டனர். அக்காலத்தில் அவ்வேந்தர் வடமொழிவாணரைத் தமிழகத்திற் குடியேற்றி, நிலங்களையும் சிற்றூர்களையும் அளித்து ஆதரவு தந்தனர். குடி, மங்களம், புத்தூர், சதுர்வேதமங்கலம், பிரமபுரி, பிரமதேசம். என்ற பெயர்களைக் கொண்ட ஊர்கள் அனைத்தும் வடமொழிவாணர் குடியேறிய ஊர்களேயாகும். இவ்வடவர் கலப்பால் பல்லவர் காலத்தில் வடமொழி யிலக்கணம் தமிழில் கலக்கலாயிற்று. பதிகம், விருத்தம், முதலிய பாவகைகள் வடமொழியிலக்கணம் பின்பற்றித் தமிழில் புகுந்தன. வைதிகச் சமயமும் தென்னாட்டில் கால்கொள்ளத் தொடங்கிற்று. எனவே தமிழில் வடமொழிக் கலப்பு மிகுதியாக ஏற்படத் தொடங்கியது. இந்த உண்மையைச் சைவத் திருமுறைகளிலும், ஆழ்வார் அருட்பாடல்களிலும் கண்டு தெளியலாம். வடவர் கூட்டுறவால் தமிழ்ச்சிவன் வேதகால ருத்திரனோடு இணைக்கப் பட்டான்; தமிழ்க்கொற்றவை துர்க்கையோடு இணைக்கப்பட்டாள்; தமிழ் முருகன் சுப்பிரமணியனாக்கப்பட்டான்; பம்பாய் மாகாணத்தில் பெருவழக்குப் பெற்றிருந்த வினாயகர் தமிழகத்திற்குக் குடியேற்றப்பெற்றுத் தமிழ்ச் சிவனுக்கு முதற் பிள்ளையாகும் பேறுபெற்றார். வடமொழிவாணர் எழுதி வைத்த புராணக்கதைகளெல்லாம் திருமுறைகளில் புகுந்துவிட்டன. இராவணன் கைலையைப் பெயர்த்தமை, ஐயனார் பிறப்பு, திருமாலின் அவதாரக் கதைகள், சிவபெருமான் செய்தனவாகக் கூறப்படும் திருவிளையாடல்கள்

முதலியனவும், படிக்கவும் கேட்கவும் அருவருப்பான சில கதைகளும் சமய நூல்களில் இடம் பெற்றன.

சோழப் பேரரசர் காலத்தில் (கி. பி. 900—1300) தமிழகத்தில் கோயில்கள் பெருக்கெடுத்தன. சைவசமய வெறி தலைதூக்கியது. இக்காலத்தில் சைவ சமயம் சோழப் பேரரசரால் போற்றி வளர்க்கப்பட்டது. ஆனால் வைணவம் ஓரளவு அடக்கப்பட்டதென்றே கூறலாம். இராமானுசர் சோழ நாட்டிலிருந்தே விரட்டப்பட்டார். இரண்டாம் குலோத்துங்கன் தில்லையிலிருந்த கோவிந்தராசர் சிலையைப் பெயர்த்துக் கடலில் எறிந்துவிட்டான். கோவில்களைக் கண்காணிக்கும் மாகேசுவரர் வைணவரோடு பழகவும் கூடாதென்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. சைவத்திலும் தமிழ்ப்புலமையிலும் அரசியல் அறிவிலும் மிகச்சிறந்த சேக்கிழார் பெருமானும் புறச்சமய வெறுப்பிலிருந்து தப்பவில்லை. "மாலும் அயனும் காணாத சிவன்" என்று பொருள்படும் தொடரினைப் பலநூறு இடங்களில் தமது பெரிய புராணத்தில் கூற அவர் தவறவில்லை. இத்தின்ப நிலையில் தோன்றியவனே கம்பன். அப்பெருமகன் நாட்டில் நிலவிய சமய வேறுபாட்டை வெறுத்தான்: அரியும் சிவனும் ஒன்றே என்பதையும் அரசியல் இருக்க வேண்டும் நிலையையும் அரசனது இலக்கணத்தையும் பிற நன்னெறிகளையும் தனது பெருங் காவியமாகிய இராமாயணத்தில் பல இடங்களில் வற்புறுத்திக் கூறியுள்ளான்.

சோழப் பேரரசின் காலத்தில் சிந்தாமணி பெரியபுராணம், கம்பராமாயணம் என்னும் பெருங் காவியங்கள் தோன்றின. கலிங்கத்துப்பரணி, தக்கயாகப் பரணி, மூவர் உலா, குலோத்துங்கன் கோவை, அம்பிகாபதிக் கோவை, முதலிய சிறு நூல்கள் தோன்றின. யாப்பருங்கலம், யாப்பருங்கலவிருத்தி, வீரசோழியம் நன்னூல் என்னும் இலக்கண நூல்கள் தோற்றமெடுத்தன. ஆழ்வார்களின் அருட்பாடல்களுக்கு மணிப் பிரவாள நடையில் விரிவுரை தோன்றியதும் இக்காலத்திலே தான். பன்னிரு திருமுறைகளின் சத்துப்பொருளாகச் சிவஞான போதமும், பிற சித்தாந்த சாத்திரங்களும் இக்காலத்திலே தான் தோன்றின. தமிழரான சோழர் ஆட்சியில் பல துறைகளிலும் தமிழ் நூல்கள் மிகுதியாகத் தோன்றின என்று கூறுதல் தவறாகாது. சங்ககாலச் சைவம் பிற்காலத்திலே வைதீக நெறியோடு இணைந்து, நாயன்மாரால் வளர்க்கப்பட்டு, சோழரால் பலப்படுத்தப்பட்டது என்று கூறலாம். இதனாற்றான் சித்தாந்த நூல்களில் வடமொழிக் கலப்பு மிகுதியாகக் காணப்படுகின்றது.

பிற்காலம்

சோழராட்சிக்குப் பிறகு தமிழகம் முஸ்லிம் படையெடுப்புக்கு ஆட்பட்டது; பின்னர் விஜயநகர ஆட்சிக்கு உட்பட்டது; அதன் பின்னர்க் கர்னாடக நவாப்பின் ஆட்சிக்கும், மகாராஷ்டிர ஆட்சிக்கும், நாயக் மன்னர் ஆட்சிக்கும் இடம் தந்தது. இந்த ஆட்சி மாறுபாடுகளினால் தமிழகத்தில் இந்துஸ்தான், கன்னடம், தெலுங்குச் சொற்கள் வழங்கலாயின: அவ்வழக்கு நூல்களிலும் புகுந்து விட்டது. வாணிகம் புரியவந்த போர்ச்சுக்கீசியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் சொற்களும் தமிழில் புகுந்தன.

இப்பிற்காலத்தில் சைவ மடங்களே தமிழை வளர்க்கும் நிலையங்களாக விளங்கின. அவற்றிலிருந்த சமயப் பெரியார்கள் எண்ணற்ற புராணங்களையும் சமய நூல்களையும் இயற்றினர். தமிழராக இருந்து இஸ்லாத்தைத் தழுவிய தமிழர்கள் அச்சமயத்தைப் பற்றித் தமிழில் நூல்கள் எழுதினர். அவற்றுள் சிறந்தது உமறுப் புலவர் எழுதிய சீறாப்புராணம்.

கிறிஸ்தவ சமயப்பணி செய்ய வந்த வீரமாமுனிவர், போப்பையர், கால்டுவெல் ஐயர், ரட்லர், வின்ஸ்லோ முதலிய அறிஞர்களும் தமிழில் அகராதிகளையும், செய்யுள் நூல்களையும், மொழிபெயர்ப்பு நூல்களையும், ஆராய்ச்சி நூல்களையும் இயற்றிப் புகழ் படைத்தனர். அப் பெருமக்களது சீரிய தொண்டினால் தமிழின் பெருமை உலக நாடுகளிற் பரவலாயிற்று. நமது பெருமையை உலகெலாம் பரவச் செய்த அப் பிறநாட்டு நல்லறிஞருக்கு நமது நன்றி கலந்த வணக்கம் உரியதாகுக!

ஆங்கிலஆட்சியில் இராமலிங்க அடிகள், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை போன்ற பெருமக்கள் தமிழில் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடித் தமிழை வளர்த்தனர். யாழ்ப்பாணத் தமிழ்ப்பெரும் புலவரான ஆறுமுகநாவலர் தமிழுக்கும் சைவத்திற்கும் செய்துள்ள தொண்டு அளவிடற்கரிதே! அப்பெருமானைப் பின்பற்றித் திரு. கனகசபைப்பிள்ளை, கதிரைவேற்பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை, தி. தா. கனகசுந்தரம்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், விபுலானந்த அடிகள், மகாவித்துவான் கணேசையர் போன்ற புலவர் பெருமக்கள் தமிழுக்குச்செய்துள்ள தொண்டு உண்மையில் அளவிடற்கரியதாகும். இந்த யாழ்ப்பாணப் பெரும் புலவர்களுக்கு இந்தியத் தமிழர் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளனர்.

சங்கநூல்களை நாம் அனைவரும் படித்து மகிழும் வண்ணம் வெளியிட்ட பெரியார் பலர். அவருட் சிறந்தவர் டாக்டர். உ. வே. சாமிநாதையர். இப்பெருமானைத் தமிழுலகம் மறத்தல் இயலாது. காலஞ்சென்ற பாண்டித்துரைத் தேவர், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, கா. சுப்பிரமணிய பிள்ளை, வ. உ. சிதம்பரம் பிள்ளை, நாவலர் வேங்கடசாமி நாட்டார், மகாவித்துவான், ரா. இராகவையங்கார், திரு நாராயணையங்கார், மறைமலையடிகள், பண்டிதமணி, திரு. வி. க. போன்ற புலவர் பெருமக்கள் இந்த நூற்றாண்டில் தமிழ் வளர்த்தவர். இவர் அனைவருக்கும் இந்த நன்னாளில் நமது நன்றி உரியதாகுக. இவ்விருபதாம் நூற்றாண்டில் தமிழ்க்கவிஞர் பலர் தம் அரிய கவிகளால் நம் உணர்ச்சிகளைத் தட்டி யெழுப்பியுள்ளனர். அவருட் சிறந்தவர் நால்வர் என்னலாம். அந்நால்வருள் சி. சுப்பிரமணியபாரதியாரும், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையும் இப்போது நம்மிடையே இல்லை. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் இன்று நம்மிடையே இருக்கின்றனர். இக் கவிஞர் தம் பாடல்கள் நாட்டுப் பற்றையும், தமிழ்ப் பற்றையும், சமுதாயச் சீர்திருத்த உணர்ச்சியையும், சமய நினைப்பையும் நமக்கு ஊட்டி வருகின்றன. இன்றும் தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலும் பெருமக்கள் பலர் தமிழ்ப்பணி செய்துவருகின்றனர். இவர் அனைவருக்கும் நமது உளங்கலந்த நன்றி உரியதாகுக.

தொகுப்பு

இதுகாறும் தமிழின் பெருமையும், பழமையும், வரலாறும் ஒருவாறு கூறப்பட்டன. ஒரு பெண்ணின் தூய்மை காக்கப்படுவது போல மொழியின் தூய்மை காக்கப்படல் வேண்டும். தமிழில் தக்கசொல் இல்லாதபோது தான் பிறமொழிச் சொற்களை எடுத்தாளலாம். 'தமிழ் வாழத் தமிழன் வாழ்வான்' என்பதை நாம் மறந்து விடுதலாகாது. அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமற்ற கற்பனைகளையும் சட்டுக்கதைகளையும் சமயத் தொடர்பானவை என்று கருதும் அறியாமை தமிழரைவிட்டு நீங்குதல்வேண்டும். தமிழன் தாய் மொழிப் பற்றும், தாய் நாட்டுப் பற்றும், தமிழினப்பற்றும், நிரம்பியவனாக இருத்தல் வேண்டும். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்னும் சித்தாந்த சைவக் கொள்கை தமிழரிடம் பரவும் நாள்தான் தமிழன் வையத்து வாழ்வாங்கு வாழும் பொன்னாளாகும்.

தமிழ் வர்ழ்க! தமிழினம் வளர்க!

மலையாள மறவர்

சித்தாந்த கலாநிதி-பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

மலபார் போலீஸ் என்பது நமது மாகாணத்து அரசியலில் போலீஸ் படை வகையுள் ஒன்று. போலீஸ் படை என்றாலே முன் காலத்தில் மக்கள் பெரிதும் அஞ்சுவர். முன்னாளில் போலீஸ் படையில் நிரம்பிய கல்வியுள்ளவர் மிகுதியாக இல்லை. அவர்களிற் பலர் தாங்கள் பொதுமக்களின் பொதுநலம் காக்கும் துணைவர் என்பதை மறந்தொழுகினர். சிலர் அறியாதொழுகினர். அதனால் மக்களுக்கு அவர்களைக் கண்டாலே அச்சம் மிகுந்திருந்தது. பின்பு காங்கிரஸ் இயக்கம் தோன்றி அரசியல் உரிமைப் போர் நடத்திய காலையில் போலீஸ் படையின் அதிகாரவரம்பு மக்கட்குத் தெரிந்தது. போலீஸ் படையிலும் நல்லபடிப்பும் நயத்தக்க பண்பும் உடையவர் சேர்ந்தனர். போலீஸ்படை நாட்டுக்குத் தொண்டுபுரியும் நல்லதோர் அறப்படை எனபது, மக்கள் மனதிலும் போலீஸ் படையினர் உள்ளத்திலும் விளங்குவதாயிற்று.

இப்போலீஸ் படையில் மலையாளப் படை ஒன்று இப்போதும் உளது. இதன்பால் பழைய முரட்டுத் தன்மை இருந்துவருகிறது. நாட்டில் எங்கேனும் எளிதில் அடக்கமுடியாத கிளர்ச்சிதோன்றினால் அரசியலார் அந்த மலபார் போலீஸை அங்கே அனுப்புவர். இந் முரட்டுப் படையினைக் கண்டவுடனே மக்கள் அஞ்சி யோடிவிடுவர் கிளர்ச்சியும் அடங்கிவிடும்.

இந்த மலபார் போலீஸ் படையை நமது மாகாண அரசியலா வைத்தாளுவது காண்பவர் இந்தப் படை நலம் இந்த அரசியலாருக் எப்படி உண்டாயிற்று என எண்ணுவர். இதற்குப் போலீஸ் அதிகா களையோ, மாகாண அரசியல் வரலாற்றையோ, தேடிப்போக வேண்டி தில்லை. சுமார் 700 ஆண்டுகட்கு முன்பே நம் தமிழ்வேந்தர் இப்பை யின் பலத்தை அறிந்திருந்தனர்.

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் (கி. பி.) 1276 1290) பாண்டி நாட்டைச் சடையவர்மன் சுந்தரபாண்டியன் I தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்தான். அவன் காலத்தில் சோழ, பல்லவ களின் ஆட்சிவலி குன்றியிருந்தது. சுந்தரபாண்டியன் புகழ் வடபெண்

ணைக் கரை வரையில் பரவியிருந்தது. அந்நாளில் தொண்டை நாட்டிலும் சோழநாட்டிலும் வாழ்ந்த சிற்றரசர்கள் சுந்தரபாண்டியனுக் கஞ்சியே யொழுகினர். பாண்டியனது ஆட்சி நலம் தமிழக முழுதும் பரந்திருப்பினும், நாட்டின் அரசியற் பாதுகாப்புப் பண்டைச் சோழ பாண்டியர் ஆட்சியில் இருந்தது போலில்லை. எனினும் பண்டை நாட்களில் சிறு நாடுகளும் ஊர்களும் தம்மைத் தாமே மாநாடும் மகாசபையும் அமைத்துப் பாதுகாத்துக்கொள்ளும் முறையில் வழுவா திருந்தன.

தொண்டைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று திருக்கச்சூர் ஆகும். அப் பகுதி களத்தூர் கோட்டத்து செங்குன்ற நாடு எனப்படும். இக் கச்சூருக்கு வடக்கே யுள்ளது இரண்டாயிர வேலிப் பற்று. இது அந்நாளில் பெரிய நகரமாய் விளங்கிற்று. இப் பகுதியில் உத்திப் பாக்கம் என்றோர் ஊர் உண்டு. அதற்கு ஆதிநாயக சதுர்வேதிமங்கலம் என்றும் பெயர் கூறுவர்; இவ் வூரில் வேதியர் பலர் வாழ்ந்து வந்தனர். சதுர்வேதிமங்கலம் எனப்படுவதொன்றே அவ் வூரில் நான்கு மறைகளும் வல்ல வேதியர் குடிகள் பல நிறைந்திருந்தன என்று உணர்த்துகின்றது. பன்மை பற்றிச் சதுர்வேதிமங்கலம் எனப்படுதலால் அவ் வூரில் வேளாளரும் வாழ்ந்தனரென்றறிதல் வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு வகையில் அரசியல் போதிய வலியில்லாமல் இருப்பதை அவ் வூரில் வாழ்ந்த சிலர் தெரிந்துகொண்டனர். அவர்களுள் ஆட்கொண்ட வில்லி, பாம்பணையான், மலை வாய்க்கோன், வரதன், சாளுவன் என்போர் சிறப்புடையோராவர். அவர்கள்பால் சில வேளாளரும் நட்புற்றிருந்தனர். ஆட்கொண்ட வில்லி முதலியோர் தமக்குரிய தொழிலில் ஈடுபடாது வேறுவகையில் பொருளீட்டும் கருத்துடையோராய்க் கீழ்மக்கள் மேற்கொள்ளும் களவுத் தொழிலில் இறங்கினர்.

இக் கள்வர் கூட்டம் அப் பகுதியிலுள்ள ஊர்களில் இரவுக் காலத்திற் புகுந்து சூறையாடுவதும், வீடுகளிற் புகுந்து மக்களைக் கொல்வதும், சிலரைப் பற்றிக் காதறுப்பதும், மகளிரைக் கற்பழிப்பதுமாகிய தீச்செயல்களைச் செய்து திரிந்தனர். சில ஊர்களில் நிரை கவர்ந்து சென்று வேறு ஊர்களில் அவற்றை விற்றனர். இவர்களால் அப் பகுதியில் வாழ்ந்த மக்கட்கு அச்சமே பெரிதாயிற்று. அந் நாட்டவர்க்கு இவர்களால் பெருத்த மானக்கேடும் பழியும் உண்டாயின. இவற்றால் பெருந்துயர்க்குள்ளான நாட்டவர் அந் நாடு காக்கும் தலைவர்

கள்ளான விக்கிரம சோழ தேவரான இருங்கோள சானியன் வாண ராய ருக்கும் திருமலையண்டானான முனையதரையனுக்கும் தெரிவித்தனர்.

வாணராயனும் முனைய தரையனும் படை மறவர் சிலர் உடன் வரச் சென்று காடுகளிலும் குன்றின் விடர்களிலும் ஒடுங்கி யிருந்த ஆட் கொண்ட வில்லி முதலிய அனைவரையும் பற்றிக் கொணர்ந்து நையப் புடைத்துத் தண்டம் விதித்தனர். அவர்கள் வீடுகளை இடித் துத் தள்ளி அவர்களையும் கடுங்காவலில் வைத்தனர்.

சில நாட்கள் கழிந்ததும் இக் கள்வர்கள் தங்கள் குற்றமுணர்ந்து மனம் திருந்தியிருப்பாரென எண்ணிக் காவலை நெகிழ்த்து விட்டனர். அவர்கள் சில திங்கள் காறும் திருந்தினர் போல நடந்துகொண்டனர்.

இதற்கிடையே நாடு காவலில் சில மாறுதல்கள் உண்டாயின. வாணராயரும் முனையதரையரும் அரசன் ஆணையால் வேறு நாட்டுக் குச் சென்றனர். இச் செங்குன்ற நாட்டுப் பகுதிக்குப் பொத்தப்பிய ரையர் என்றோர் அரசிளங்குமரர் தலைவராக வந்து சேர்ந்தார். திருக் காளத்தியைச் சேர்ந்த நாடு பொத்தப்பி நாடு எனப்படும். அந்நாட்டில் தான் பண்டை நாளில் கண்ணப்ப நாயனார் தோன்றினர். அது செங் குன்ற நாட்டைக் காட்டிலும் காடும் மலையும் அடர்ந்து கட்டாண்மை மிக்க வேட்டுவர் நிறைந்து வாழும் காட்சி சிறந்தது. அந் நாட்டு அரச குமாரராதலால், பொத்தப்பியரையரது வன்மைக்கு, வேறு சிறப்புக் கூறுவது மிகை. அன்றியும், அவர்பால் வள்ளுவ நாடாள்வானான இருங்கோளார் என்றொரு தானைத் தலைவன் இருந்தான். வள்ளுவ நாடென்பது மேலைக் கடற்கரையில் மலையாளஜில்லாவிலுள்ள வள்ளுவ நாடு தாலூகாவாகும். அந்நாட்டுப் பகுதியில் இருந்து மேன்மையுற்றது கொண்டு வேந்தன் அவற்கு வள்ளுவ நாடாள்வான் என்ற சிறப்பை நல்கியிருந்தான்.

பொத்தப்பியரையர் நாடுகாவல் மேற்கொண்டதும் சின்னாட்குப் பின் ஆட்கொண்டவில்லி, பாம்பணைபான் முதலியோர், இப் புதுத்தலை வர்களின் வன்மையும் திறமையும் அறியாமல் பண்டுபோல் ஆறலைக் கள்வராய் மாறினர். மக்கட்குத் தொல்லை முன்னையினும் பெரிதா யிற்று. ஒவ்வோர் இரவிலும் அவர்களுடைய சூறையாட்டு நடந்த வண்ண மிருந்தது. பொத்தப்பியரையரும் வள்ளுவ நாடாள்வானும் கலந்து இக் கள்வர்களைப் பிடித்தற்கு வேண்டும் சூழ்ச்சி செய்து சில மறவர்களைச் செலுத்தினர்.

தம்மைப் பற்றுவதற்குவந்த மறவர்களுள் சிலரை ஆட்கொண்ட வில்லி முதலியோர் எதிர்த்து நின்று பொருது கொன்றனர்; சிலர்க்குப் பொருள் தந்து தமக்குத் துணைவராக்கிக் கொண்டனர். இதனையறிந்த பொத்தப்பியரையருக்கு மிகுசின முண்டாயிற்று. உடனே அவர் வள்ளுவ நாடாள்வானை அழைத்து 'இனி இவர்களை விடுவது கூடாது; இவர்களது இயல்பு அறியாத வன்கண்மை மிக்க மறவர்களைக் கொணர்ந்து இவர்களை வேட்டையாடி வேரோடு தொலைக்க வேண்டும்; இந்நாட்டவர் வரின் அவர்கட்குச் செஞ்சொல்லும் செம்பொன்னும் வழங்கிச் சிந்தையைத் திரித்துவிடும் செயலில் இக் கயவர்கள் கீர்த்தியுடையராய் இருக்கின்றனர்' என்றார். பின்னர் வள்ளுவ நாடாள்வான் 'தங்கள் கருத்துப்படி வன்கண்மை மிக்க மறவர் வேண்டின் இப்போதே வள்ளுவநாட்டிற்கு ஓலைவிடுத்து மலையாள மறவர்களை வருவிக்கலாம்; அவர்கள் பொருட்டுச் செலவிடுவதற்கு நமது பண்டாரத்திலோ கோயில பண்டாரத்திலோ பொருள் இல்லை; இதற்கு என் செய்வது?' என்றான். பின்பு அரசியற் சுற்றத்தாரைக் கலந்து இந்நாட்டில் வாழும் வணிகர், கைக்கோளர், சாலியர், எண்ணெய் வாணிகர் என்ற இவர்க்கு ஆண்டுக்கு ஆறு பணம் செலுத்துமாறு வரி ஏற்படுத்துவது நலமெனத் தேர்ந்தனர். பின்பு இதனைப் பாண்டிவேந்தனுக்குத் தெரிவித்து அவன் ஆணை பெற்று நாட்டவரைக் கூட்டி மேற்கூறிய வரியை விதித்தனர். அவ்வருவாயில் ஒரு பகுதி அரசியற் பண்டாரத்துக்கும் மற்றொரு பகுதியைத் திருக்கச்சூர்ப் பண்டாரத்துக்கும் சேருமாறு ஏற்பாடு செய்தனர்.[1]

சுந்தரபாண்டியன் தன்னாட்சியில் ஊர் மகாசபைகட்கும் நாட்டவர் கூட்டம் மாநாட்டிற்கும் சிறப்பிடம் தந்திருந்தான். அவன் காலத்தில் பெண்களும ஊராட்சிக் குழுவில் உறுப்பினராக இருந்தனர். தொண்டை நாட்டு உத்தரன்மேரூர் நியாயத்தார் குழுவில் பெருங் கருணையாட்டியான தேவர்களம்மை பெண்பாள் உறுப்புப் பெற்றிருந்தது இக்காலத்தே யாகும்.

இவ்விருபதாம் நூற்றாண்டிலும் மக்களிடையே அடக்கமுடியாத கிளர்ச்சி தோன்றிய விடத்து அரசியலார் மலையாள நாட்டு மறவரைத் (Malabar Police) தருவிக்கும் செயலை காண்கின்றோம். இம்முறை பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே அரசியலாரால் மேற்கொள்ளப்பட்டிருப்பதை இதனால் அறிகின்றோம்.

---

[1] 300 of 1909.

வள்ளுவ நாடாள்வான் வள்ளுவநாட்டுத் தலைவர்களுக்கு ஓலை விடுவித்தான். சின்னாட்களில் மலையாள மறவர் சிலர் செங்குன்ற நாட்டுக்கு வந்து சேர்ந்தனர். அவர்கட்கு ஆட்கொண்ட வில்லி முதலிய கள்வர்களின் உடற்குறிப்பும், அந்நாட்டு மலைப்பகுதிகளின் இயல்பும், வழி முறையும் கற்பித்துக் கள்வர்களைப் பற்றிக் கொணருமாறு விடுவித்தான். வழி துறைகளைக் காட்டுதற் பொருட்டு உண்ணாட்டு மறவர்கள் சிலரும் உடன் சென்றனர்.

களத்தூர்க் கோட்டத்துக் காடும், மேடும், பொதும்பும், புதரும் விடாது ஆராயப்பட்டன. ஊர்தோறும் தேடினர். வேற்றுருக் கொண்டும், வினை பல செய்தும் தேடித் திரிந்த மலையாளமறவர் முடிவில் ஆட்கொண்ட வில்லி முதலிய அனைவரையும் பிடித்துக் கொண்டனர். கொண்டவர் ஒரு காட்டு வழியே வருவாராயினர்.

தகுதியான ஓரிடத்தே நெருங்கியதும், இதுகாறும் பூனைபோல் ஒடுங்கியிருந்த கள்வர்கள், மலையாள மறவரும், பிறரும் அயர்ந்த அற்றம் பார்த்து அவர்களை எதிர்த்துப் பொரத் தொடங்கினர். மலைத்து நின்ற மறவர் கைப்படையையும் வில்லம்புகளையும் தாம் கவர்ந்து கொண்டு சிலரை வேலாற் குத்திக் கொன்றனர். சிலரை அம்பெய்து வீழ்த்திவிட்டு ஓடி விட்டனர்; ஆயினும் ஆட்கொண்ட வில்லியும் பாம்பணையானும் தப்பிப்போக முடியவில்லை. எஞ்சிநின்ற மலையாள மறவரும் பிறரும் அவ் விருவரையும் திருக்கச்சூரிற் சிறையிலிட்டனர்.

சின்னாட்கெல்லாம் உலகுடைய பெருமாளாகிய சுந்தரபாண்டிய தேவர் தொண்டைநாடு வந்து குன்றத்தூரில் தங்கியிருந்தார். ஆட்கொண்ட வில்லியும் பாம்பணையானும் கைப்பற்றப் பட்டுச் சிறையிலிருப்ப தறிந்து அவர்களைத் தன்பால் கொணருமாறு பணித்தார். மலையாள மறவர்களும் பிறரும் கூடிக் குன்றத்தூர்க்குக் கொண்டு சென்றனர்.

இதற்கிடையே, இம் மறவர் கைப்பிடியினின்றும் தப்பியோடிய மலைவாய்க்கோனும், வாதனும், சாளுவனும் வேறு பல கள்வர்களைத் துணையாகக் கொண்டு, ஆட்கொண்ட வில்லியைக் குன்றத்தூர்க்குப் பாண்டி வேந்தன் திருமுன் கொண்டு செல்லும் செய்தியை ஒற்றினாலறிந்து வழியில் ஓரிடத்து மறைந்திருந்தனர்.

குன்றத்தூர்க்கு வரும் வழியில் சானூர் அரசிப்பாக்கம் என்ற சிறூர்க்கண்மையில் பெருங்காடு ஒன்றிருந்தது. ஆட்கொண்ட வில்லியையும் பாம்பணையானையும் கொணர்ந்த மறவர், அக் காட்டிடையே புகுந்து சென்ற செவ்வி நோக்கி, மலைவாய்க்கோனும் பிறரும் திடீரெனப் போந்து வளைத்துக் கொண்டு கடும்போர் உடற்றினர். ஆட்கொண்ட வில்லியும், பாம்பணையானும் விடுவிக்கப் பட்டனர்; அவர்களைக் கொணர்ந்த மறவர் பலரும் கொலையுண்டனர். தப்பியோடிய சிலர் குன்றத்தூரடைந்து வேந்தன் முன் வீழ்ந்து பணிந்து நிகழ்ந்தது முற்றும் நிலைபெற வுரைத்தனர். வேந்தன் கண்களில் தீப்பொறிகள் பறந்தன. மிக்கெழுந்த சினத்தால் முகம்சிவந்து, மீசை துடித்து, பற்கள் கடியுண்டன. மடித்த வாயினின்றும் வெடித்தசொற்கள் வெளிவந்தன.

'என்னே! வடவேங்கடம் முதல் தென்குமரி காறும் வாடாவலி கொண்டு கோடாப் புகழ் பரப்பிய என் கைவன்மைக்கு இச் சிறு கள்வர் கூட்டம் களங்கம் உறுவிப்பதோ' எனக்கனன்று 'நாடு முற்றும் இதனைத் தெரியப்படுத்துக' எனச் சொல்லி, 'இக் கள்வர்கள் மேதகு குலத்து வேதியராயினும் இனிக் கீழ்குலமாக்களே யாவர். ஒவ்வோரூரிலும் வாழும் மக்கள் இக் கள்வர்களை எங்கே கண்டாலும் உடனே கொன்றழித்துச் செய்தி தெரிவித்தல் வேண்டும். அம் மாக்கட்குத் துணைசெய்தாரென எவரேனும் ஐயுறப்படின் அவர்களையும் ஆராய்ச்சியின்றிக் கொல்க' என்று ஆணை பிறப்பித்தான்.

மேலும் சொல்லலுற்றதும் அவன் உள்ளத்தே தமிழ் வேந்தற்குரிய தனிப்பெரும் பண்பு மேலெழுந்தது. அறியாமையால் மிகை செய்து திரியும் இக் கல்லா மாக்கள் கொலையுண்டிறப்பின் அவர் தம் உயிர், உடலின் நீங்கிய வழித் தீமை புரியா, அவை உய்திபெற வைப்பது நன்னடை நல்கும் வேந்தன் கடன். அதற்கு அவர்களுடைய பொருளில் ஒரு கூறு ஆண்டவன் திருப்பணியில் ஈடுபடல்வேண்டும். உடல், பொருள், ஆவி மூன்றனுள் உடலும் உயிரும் பிரிக்கப்படுவதால் எஞ்சி நின்ற பொருளேனும் இறைவன் திருப்பணிக்குச் செல்லுதல் வேண்டும் என்று எண்ணினன். 'அவர்கள் வீடுகளையும் அவர்கள் வழிவழியாகப் பெற்று நுகர்ந்து வரும் நிலம்பொருளாகிய

உடைமைகளையும் கோயில்களுக்கும், அறச்சாலைகட்கும் விற்றுவிடுக. விற்க, வரும் பொருளில் அவர்கட்கு விதித்த தண்டம் போக எஞ்சி நிற்கும்பொருளை உத்திப்பாக்கத்தில் உள்ள திருவகத்தீச்வரமுடைய நாயனார் கோயிலிலும், திருக்கயிலாயமுடைய நாயனார் கோயிலிலும், அக்கள்வர்கள் பெடாரான சந்திகள் நிறுவுக' என்று ஆணையிட்டான்.

அவ்வாறே அவர்கள் கொலையுண்டனர். அவர்கள் வீடும் உடைமையும் கோயில்கட்கு விற்கப்பட்டன. வந்த பொருளும் திருக்கச்சூர்க் கோயிற் பண்டாரத்தே சேர்க்கப்பட்டது. அரசனாணையிட்டவாறே, இச் செய்தி முற்றும் திருக்கச்சூராலக் கோயில் வெளியே வட சுவரில் தீட்டப்பட்டுள்ளது.[1]

---

*மதிப்புரை

குறுந்தொகை விளக்கம்

சேது சமஸ்தான மகா வித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் குறுந்தொகை விளக்கம் என்னும் நூலை எழுதி வெளியிட்டார்கள். குறுந்தொகை நானூறு பாடல்களைக் கொண்டது. அவற்றுள் 111 பாடல்களுக்கு இந் நூல் உரை விளக்கம் தருகிறது. இவ்வுரை விளக்கமும் செய்யுட்களில் சிலவற்றிற் காணப்பெறும் திருத்தங்களும் மகா வித்துவான் அய்யங்கார் அவர்களுடையது.

குறுந்தொகைக்கு சௌரீப் பெருமாள் அரங்கன் என்பவர் முதலில் உரை கண்டவர். அடுத்து உரை கண்ட பெருமை டாக்டர் உ, வே. சாமிநாதையர் அவர்களைச் சாரும். அவ்விரண்டிற்கும் பிற்பட வந்தது மகாவித்துவான் அவர்களது உரை.

---

[1] A. R, No. 315 of 1909, R. for 1910 Para 34.

* மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்பவேண்டும்.

5476

பல இடங்களில் அய்யங்கார் அவர்கள் காட்டியுள்ள பாட பேதங்களும் அவற்றால் உணரப்படும் பொருள் நயங்களும் பாராட்டத் தக்கன. செய்யுள் 13, 25 குறிப்பிடத் தக்கவை. விளக்கவுரை சிலஇடங்களில் நயம்பட அமைந்துள்ளது. 'புதல்வன் தாய்' என்று தலைவியைப் பரத்தை கூறியதற்கு அய்யங்கார் அவர்கள் கூறியுள்ள நயம் போற்றுதற்குரியது: "புதல்வனைப் பேணுதற்குரியளன்றி, இன்பத்திற்கு உரியளல்லள் என்பது குறித்துத் தலைவியைத் தன் மகன்தாய் எனப் பரத்தை யிகழ்ந்தாள்" என்பது அவ்விளக்கம். 11-ஆம் பாடலில், "கட்டி நன்னுடு வடுகர் முனைக்கு இப்பால் தமிழகத் துண்மை துணியப்படும். கட்டி, சேரன் படைத் தலைவருள் ஒருவனென்பது, 'கங்கன் கட்டி' (அகம் 44) என வரும் அகப்பாட்டான் அறிந்தது" என்று எடுத்துக் காட்டும் குறிப்புப் பெரிதும் பாராட்டத் தக்கது.

25-ஆம் செய்யுளில் 'கள்வன்' என்ற சொல் தவறு களவன் என்று இருத்தலே ஏற்புடையது. 'களவன்' என்பது செய்தி நிகழ்ந்த களத்துச் சான்றாயினனைக் குறிப்பது' என்று பொருள் கொண்ட திறன் பெரிதும் போற்றத் தகுவது. இவ்வாறே 'கொங்குதேர் வாழ்க்கை' என்று தொடங்கும் செய்யுளுக்கு இவர்கள் கூறும் விளக்கவுரை படித்துப் படித்துச் சுவைக்கத் தக்கது,

செய்யுள் 40-இல் வரும் "செம்புலப் பெயனீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தன" என்பதற்கு இவர்கள் கூறும் விளக்கம் நன்கு அமைந்துள்ளது. செய்யுள் 73-இல் குறிக்கப் பெறும் கோசர் சூழ்ச்சி யாது? என்பதை இப் பேராசிரியர் விளக்கி யிருத்தல் படித்துச் சுவைத்தற்குரியது. சுருங்கக் கூறின், குறுந்தொகை விளக்கம் சங்க நூல்களைப் படித்தவரால் பெரிதும் வரவேற்கத் தக்கது. மகாவித்துவான் அவர்கள் குறுந்தொகை முழுமைக்கும் இத்தகைய விளக்கம் எழுதவில்லையே என்ற ஏக்கம் உண்டாகின்றது. இந் நூல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது. அப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் இந் நூலுக்கு எழுதிய முகவுரை அவர்களது புலமைக்குச் சிகரமாய் விளங்குகின்றது. தமிழாசிரியர் ஒவ்வொருவரும் சங்க நூல்களைப் படிக்கும் பிறரும் இந் நூல் உரையினைப் படித்துப் பயன்பெறுதல் நல்லது இத்தகைய பயனுள்ள நூல்களை வெளியிட்டுவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாருக்கு நமது பாராட்டு உரியது.

(டாக்டர்) மா. இராசமாணிக்கனார்.

தமிழ்ப் பொங்கல்

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

இதற்கு முன்னைய ஆண்டுகளில் நடந்த பொங்கல்விழாக்களைவிட இந்த ஆண்டுப் பொங்கல் விழா தனிச் சிறப்பு வாய்ந்தது. தமிழர்கள் வாழும் பகுதிகள் மாத்திரம் ஒன்றாகச் சேர்ந்த தமிழ் மாகாணம் இந்த ஆண்டில்தான் உருவாயிற்று. அரசியல்மன்றத்தில் தமிழ்தான் இனி ஆட்சி மொழியாகும் என்றொரு சட்டமும் நிறைவேறி யுள்ளது. அரசியல் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமிழிலேயே தமது பேச்சுக்களை அம் மன்றத்தில் நிகழ்த்தினர். வேறுபட்ட அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரே மனதாக அச் சட்டத்தை நிறைவேற்றினர். இவ்வாறு தமிழ் உணர்ச்சியுள்ள அரசியல் தமிழ் வழியாக இயங்கும் நாள் இவ்வாண்டில் தோன்றினபடியால் இந்தப் பொங்கல் திருநாள் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது என்று சொல்லவேண்டியதாயிற்று.

மக்களாட்சி

மன்னராட்சி போய் மக்களாட்சி நிலவும் இந்நாளில் தமிழ்மக்கள் வாழும் நாட்டில் தமிழ் ஆட்சிமொழியாவது ஒரு வியப்பாகுமா? என்று ஒரு கேள்வி எழலாம். மக்களாட்சி வருமுன் ஆங்கில மன்னர் ஆட்சி நிலவியது யாவரும் அறிந்தது. அவர்கள் காலத்தில் தெலுங்கு கன்னடம் மலையாளம் என்ற இந்த மொழிகள் வழங்கும் பகுதிகளிற் சிலவற்றைத் தமிழ்நாட்டுடன் சேர்த்துச் சென்னை மாகாணம் என்ற பெயரால் ஒரு மாகாணமே தோற்றுவிக்கப்பட்டது. பலமொழி வழங்கும் இந்தமாகாணத்தை அவைகளில் ஏதேனும் ஒருமொழி கொண்டு ஆளுவது மற்றமொழி பேசுவோருக்குப் புரியாது என்பதனாலும், மன்னராட்சியில் மன்னருடைய மொழியே ஆட்சி மொழியாக வேண்டும் என்பதனாலும், அது தமிழர் தெலுங்கர் முதலியோர்க்கு வேறாய்ப் பொதுவாய் இருப்பதனாலும் ஆங்கில மன்னர்க்குரிய ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருந்து வருவதாயிற்று. இந்த அடிப்படையிலேதான் பலமொழி வழங்கும் நமது இந்தியநாடு முழுதும் ஆங்கிலமே ஆட்சி மொழியாக அமைந்திருப்பதாயிற்று. இப்போது ஆங்கிலரது முடியாட்சி போய்விட்டது; நாடு முழுதும் மக்களாட்சி தோன்றி விட்டது. ஆங்கில மன்னரது ஆட்சிக்காலத்துச் சென்னை மாகாணம் மக்களாட்சி வந்தபின்பும் தன் நிலைமை மாறாது இருந்தபடியால் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து நிற்பதாயிற்று.

மக்களாட்சி என்பது என்ன?

மக்களாட்சி என்பது என்ன? நாட்டில் வாழும் மக்களே தங்கள் நாட்டு அரசை ஏற்று நடத்துவதாகும். அரசர்க்குப் பதிலாக நாட்டவருள் ஒருசிலரைத் தேர்ந்து எடுத்து அவர்கள்பால் அரசை ஒப்படைத்து ஆட்சிபுரியச் செய்வது அதன் இயல்பு. அச் சிலரையும் தேர்ந்து எடுப்பவரும் அந்த நாட்டு மக்களே; தேர்ந்து எடுக்கப்படும் சிலரும் அந்த நாட்டு மக்களே யாவர். ஆகவே, அவர்களுடைய மொழிதானே அப்பொழுது ஆட்சிமொழியாக வேண்டும்; அவர்களுக்குத் தெரியாத மொழியில் ஆட்சி நடத்துவதென்பது குருடும் குருடும் குருட்டாட்ட மாடுவதாகத்தானே முடியும் என்று கண்ட அரசியல் அறிஞர், மொழிவழியாக மாகாணங்களைப் பிரித்தமைப்பது மக்களாட்சி முறைக்கு ஒத்ததாகும் என்று கண்டனர். அதன் அடிப்படையில் சென்னை மாகாணத்திற் சேர்ந்திருந்த தெலுங்கரும் கன்னடரும் கேரளரும் தத்தமக்குரிய மொழி வழங்கும் நாடுகளில் சேர்ந்துகொண்டனர். தெலுங்கர் ஆந்திர நாட்டிலும் கன்னடர் கன்னடம் வழங்கும் மைசூர் நாட்டிலும் கேரளர் கேரள நாட்டிலும் அடங்கி விட்டனர். சென்னை மாகாணத்தின் எஞ்சிய பகுதி தமிழர்க்குரியதாதலின் அது அப்படியே நின்று விட்டது; வேறு வாய்வாட்டால் சொன்னால் சென்னை மாகாணம் தமிழர் மாகாண மாயிற்று.

தமிழ் ஆட்சி மொழி

இனி, சென்னைமாகாணத்தின் ஆட்சியை ஏற்று நடத்துதற்குரிய ர் தமிழராதலால், அவர்களுடைய தமிழ் அரசியல் ஆட்சிமொழி ாக வேண்டியதாயிற்று. தெலுங்கு கன்னட முதலிய மொழியாள ராடு கூடியிருந்ததால் தமிழை ஆட்சிமொழி யாக்குவது நன்றன்று ன்பதனால் ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருந்துவந்தது. மிக்க ண்மைக் காலத்தில்தான் மலையாளிகளும் கன்னடரும் பிரிந்தார்கள்; அதனால் தமிழரே கூடிய அரசு உருவானதும் தமிழருடைய மொழி யான தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும் என்ற முடிவைச் சென் னைச் சட்ட மன்றம் இப்போது செய்து கொண்டது. இந்த முடிவு இப்பொழுது தோன்றாமல் இருந்திருந்தால் தமிழ் நாட்டு அரசியல் வாதிகளுக்கு மக்களாட்சியின் அடிப்படை யுண்மையே தெரியவில்லை என்ற பழிச்சொல் உண்டாகி யிருக்கும்.

தமிழ் மக்கள் ஏற்று நடத்தும் மக்களரசு தமிழில்தான் இயங்குமென்பது சொல்லாமலே விளங்குமே; இதற்கொரு சட்டமேன் என்றால், தமிழ் மக்கள் இன்று நடத்தும் அரசு சென்னை மாகாண அரசு. சென்னை மாகாண ஆட்சிமொழி ஆங்கில மென்பது சட்டவாயிலாக நடைபெறும் உண்மை. அதனை ஒரு சட்டவாயிலாக மாற்றுவதே ஆட்சி முறையாதலால், தமிழ் தான் இனி ஆட்சி மொழி என்று ஒரு சட்ட முடிவு காணவேண்டியதாயிற்று.

கருத்து வேற்றுமை இல்லை

தமிழை ஆட்சிமொழியாக்கும் சட்டம் மன்றத்தில் வந்தபோது மன்ற உறுப்பினர் அனைவரும் கட்சி வேறுபாடின்றி முழுமனதாக முடிபு கூறினர் என்பது வியப்பாக இருக்கிறதல்லவா? ஆட்சிமொழி வகையில் அரசியல் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை இருக்க இடமேது? என்று சிலர் நினைக்கலாம். நூறு ஆண்டுகட்கு மேல் ஆங்கில மொழியிலே ஆட்சி நடத்திப் பயின்றவர்களுக்குத் தமிழில் ஆட்சி நடத்தும் திறமை திடீரென உண்டாவது அருமை. ஒரு சிலர்க்குத் தமிழ் ஆட்சிமொழியாவதில் விருப்பம் கிடையாது. தமிழ் மொழி ஒரு தனிமொழியன்று; பிறிதொரு மொழியினின்றும் தோன்றி அதன் சார்பிலேயேவளர்ந்தது; ஆகவே, அதனால் நாட்டின் ஆட்சியை நடத்துவதென்பது எளிதன்று என்று கருதுகின்றவரும் உண்டு. வேறுசிலருக்குத் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகள் இந்நாட்டில் தமிழ் மொழியால் அரசுநடத்தி வந்தவர்கள் என்ற வரலாறேதெரியாது. தமிழக வரலாறு, இக்காலைய வரலாற்றுப்படி நோக்கினால், தொல்காப்பிய காலம், திருவள்ளுவர் காலம், சங்க காலம், களப்பிரர் காலம், பல்லவ காலம், சோழ பாண்டியர் காலம், விசயநகர வேந்தர் காலம், முகமதியர் காலம், ஐரோப்பியர் காலம், மக்களாட்சிக் காலம் என வரையறுத்துக் காணப்படும். இவற்றுள், ஐரோப்பியர் காலம் வரையில் தமிழ் தான் தமிழர்கள் அரசாட்சியில் ஆட்சி மொழியாக இருந்து வந்தது. மற்றை நாடுகளின் வரலாறுகளை நோக்கினால் வேற்றவர் படையெடுப்பும் மக்கள் பட்ட வேதனையும் விரிவாகக் காணப்படும். தமிழர் ஆட்சிக் காலங்களில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்ததே கிடையாது. பேரரசர் எனப்போற்றப்படும் அசோகர் ஹர்ஷ வர்த்தனர் முதலியோர் காலத்தும் தமிழரது தமிழகம் தனிச் சிறப்புடன் யாவரோடும் நட்புறவு

கொண்டே வாழ்ந்து வந்தது என்பதுதான் இனிது புலப்படும். இந்த வரலாற்றுச் சிறப்பை நன்கு அறிந்திருந்ததால் தான் காலம் சென்ற திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும் திரு. சி. ஆர். செட்டியாரவர்களும் நம் பாரத நாட்டு வரலாறு தென்னாட்டிலிருந்து தொடங்க வேண்டும் என்று சொல்லி வந்தனர். இத்தகைய நிலைமைகள் நாட்டில் இருப்பதால் தான் ஒருமனதாக முடிபு கண்டனர் என்பது வியப்பை உண்டு பண்ணிற்று.

தமிழில் போதிய அரசியல் ஆட்சிக்குரிய சொற்கள் இல்லை என்ற கருத்துப்பட அரசியலாட்சியில் தமிழைப் பையப் படிப்படியாகப் புகுத்த வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். ஆங்கிலப் பயிற்சி மிகுதியால் தமிழ்மொழியை வளமாகப் படிக்காதவர் பலர் அரசியல் துறைகளில் பணிபுரிகின்றனர். அவர்கள் உள்ளத்தில் இருக்கும் தமிழ்ச் சொற்களின் தொகை, இன்று உயர்நிலைப் பள்ளிகளில் மூன்று நான்காம் படிவங்களில் பயிலும் மாணவர்களிடத்து நிற்கும் ஆங்கிலச் சொற்களின் தொகையினும் குறைவாகவே இருக்கும்; அரசியல் பணியாளர்க்கு ஆயிரம் சொற்கள் வேண்டுமென்றால், இன்று அவரிடத்தில் 100 தமிழ்ச் சொற்களும் 900 ஆங்கிலச் சொற்களும் உள்ளன. அந்த நூற்றிலும் 80 சொற்கள் பேச்சு வழக்கில் பயின்றனவாக இருக்கும். இந்நிலையில் அவரை முழுக்க முழுக்கத் தமிழிலே ஆங்கிலத்திற் காட்டும் நடையழகெல்லாம் அமைய எழுதுமாறு எதிர்பார்ப்பது அறமாகாது; ஆதலால்தான் படிப்படியாகத் தமிழைப் புகுத்த வேண்டியிருக்கிறது.

இனி, ஒரு சிலர் தமிழர் அரசு நடத்தியதே இல்லை; ஆங்கிலர் வருகைக்குப் பின்புதான் அரசியல் நடத்துவது இப்படி எனத் தெரிந்தது என்று கருதுகின்றனர். இடைக்காலப் பல்லவ சோழ பாண்டிய விஜய நகர மன்னரது அரசு தமிழில் நடந்த திறத்தைக் கல்வெட்டு இலாகாவினர் படி யெடுத்து வைத்திருக்கும் பல்லாயிரக் கணக்கான தமிழ்க் கல்வெட்டுக்களைப் பார்க்காத அவர்களுடைய குறையே அதற்குக் காரணம்.

ஆங்கிலேயர் நடத்திய ஆட்சி யமைப்பை அப்படியே ஆடாமல் அசையாமல் நாம் மேற்கொண்டுவிட்டபடியால், அவ்விடத்தே தமிழைப் புகுத்துங்கால் ஆங்கிலச்சொற்களுக்கு நேராகத் தமிழ்ச் சொற்களைக் கண்டும் ஆக்கியும் கொள்ளவேண்டியிருக்கிறது. ஆங்கில அரசு தானும் ஆங்கிலத்தை நுழைத்தபோது ஜில்லா தாசில், பிர்க்கா, உசூர், முனிசிப், ஜமாபந்தி, ஜப்தி முதலிய வேற்று மொழிச் சொற்களையே அமைத்துக்கொண்டது. இவைகள் விசய நகர மன்னர்க்குப் பிற்போந்த முகமதியராட்சியில் வந்து புகுந்தவை. அரசியலாட்சிக் குரிய சொற்களை ஆக்குமிடத்தும் காணுமிடத்தும், அறிஞர்கள் அரசியலாரிடம் புதையுண்டும் மறைப்புண்டும் கிடக்கும் கல்வெட்டுக்களை எடுத்து நோக்குவார்களானால் எத்தனையோபல ஆட்சிச் சொற்களைக் காணலாம். மத்திய அரசாங்கக் கல்வெட்டுத் துறையின் அறைகளில் அச்சேறாமலும் மக்கட்கு அறியவாராமலும் சிறைப்பட்டிருக்கும் தமிழ்க் கல்வெட்டுக்களை நமது மாகாண அரசு வாங்கி மக்களிடையே வெளியிடுமானால் மிகமிகக் குறுகிய காலத்தில் அரசியற்றுறை முழுதுக்கும் வேண்டிய சொற்கள் அத்தனையும் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ்நாடு

வேறு சிலர், தமிழை ஆட்சிமொழியாக வருக்கும்போதே நமது மாகாணத்தையும் தமிழ்நாடு என்று மாற்றியிருக்கலாமே; அதனையும் மன்றவுறுப்பினர் சிலர் எடுத்துரைத்தார்களே; நமது மாகாணத்தைத் தமிழ்நாடு என்று மாற்றிவிட்டிருந்தால், தமிழ் நாட்டுக்குத் தமிழ் ஆட்சி மொழியாவது இயற்கையாக இருந்திருக்குமே என்று கேட்கின்றார்கள். இப்படி இருப்பதில் என்ன குறை? என்றேனாக, "சென்னையை ஆங்கிலச்சொல் வழக்கில் மட்ராசு என்று சொல்லுகிறார்கள்; அது சிறிது ஓசை தவறினால் மடராசு என்று ஆகி மடமை பொருந்திய அரசு என்று தமிழில் பொருள்பட்டு விடுகிறது; மதராசு என்றால் மதம் பிடித்த அரசு. கட்சி வெறி பிடித்த அரசு என்று இழி பொருள் பட்டு விடுகிறது. தமிழ் நன்கு பரவுகிறபோது கேலி கையாண்டி செய்கிறவர்களுக்கு இது மிக்க இடம் கொடுத்துவிடுமே என்றுதான் நான் அஞ்சுகிறேன். தமிழ்நாடு என்று பெயர் வைத்து விட்டால் இந்தக் குறைக்கே இடமில்லாமல் போய்விடும்" என்று

சொல்லி வருந்துகிறார். தமிழ்நாடு என்பது இடைக்காலத்தில் தோன்றிய பெயர்; சங்க காலத்தும் அதற்கு முன்பும் எல்லாம் நம் நாட்டுக்குத் தமிழகம் என்பதுதான் பெயர், தொல்காப்பியத்திற்கு முன்னுரைதந்த பனம்பாரனார் என்பவர் தமிழ் கற்ற அறிஞர்களை நினைவிற்கொண்டு தமிழ் உலகம் என்றார். உலகம் என்பதற்கு நாடு என்றே தொல்காப்பியரும் கருத்திற்கொண்டு, மைவரை யுலகம், காடுறை யுலகம் என்று கூறினர். 'வையக மருங்கில் தமிழகம் கேட்ப' 'தமிழக மருங்கு' என்றே சங்கச் சான்றோர் குறித்தனர். இடைக்காலத்தே சோழ பாண்டிய சேரர் நாடுகளை ஆண்ட மன்னர் பற்பல நாடுகளாக வகுத்து வளநாடு என்றும் நாடு என்றும் பெயரிட்டு ஆட்சி புரிந்தனர். அவர்கள் காலமுதல் நாடு என்பது ஒரு ஜில்லா அல்லது தாலூகா எல்லையில் அமைவதாயிற்று. நாடு என்ற பாகுபாடே கொண்டு பின்வந்த பரஞ்சோதியாரை உள்ளிட்டுத் தேசியகவி பாரதியாரை ஈறாகக் கொண்ட தமிழறிஞர் அனைவரும் தமிழ் நாடு என வழங்குவாராயினர். அவர்க்குப் பின்னே உருக்கொண்ட காங்கிரசு இயக்கமும் தமிழ்நாடு காங்கிரசு என்றே பெயர் கொள்வதாயிற்று.

இனி, நாடு என்ற பெயர் பெற்றவையெல்லாம் அடிக்கடி எல்லை வகையில் மாறுபட்டு வந்துள்ளன. நமது தமிழ் நாடும் வடக்கிலும் மேற்கிலும் சுருங்கி எல்லை மாறிவிட்டது. இனியும் மாறாமல் இருக்க வேண்டின், தமிழ் நாடு என்ற பெயரையும் மாற்றி, முன்பிருந்த தமிழகம் என்ற பெயரை மேற்கொள்வதுதான் நல்லதென்று கருதுகின்றோம். பழந் தமிழகம், தமிழ் நாடு எனப் பெயரெய்தியபின்புதான் எல்லையில் சுருக்கம் ஏற்படுவதாயிற்று. இனி, தமிழ் நாட்டின் ஒரு சில பகுதிகள் வடக்கினின்றும் மேற்கினின்றும் வந்துசேர இருக்கின்றன; அவை வந்தபின்பு பெயர் மாற்றம் செய்வது சிறப்பு. ஏனெனில், வேற்றுமொழி நீங்கினபின் தமிழை ஆட்சி மொழி ஆக்கினோமல்லவா? வேற்று நாட்டில் அடங்கியிருக்கும் தமிழ்ப் பகுதிகள் மீண்டு வந்து சேர்ந்தபின் தமிழகம் என்று பெயர் வைப்போம். தமிழ்ப் பொங்கல் பொங்குக. பொங்கலோ பொங்கல்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

ஐம்பத்திரண்டாந் தொகுதி.

Volume 52.

மன்மத—துன்முகி ஹூ

1955–1957

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

ருஉ-ஆம் தொகுதியின் உள்ளுறை

பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்: 1
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

புள்ளினத்தின் புனிதத்தொண்டு: 14
சாமுவேல் ஆபிரகாம்

மோரியர் படையெடுப்பு: 21
தமிழரும் நுண்கலைகளும்: 25
டாக்டர் மா. இராசமாணிக்கனர்

போக்குவரத்துக் கருவி: 31
வித்துவான். ஆ. சிவலிங்கனர்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்: 38
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

ஆ பயன்: 53
வித்துவான், ஆ. சிவலிங்கனர்

உயிர்ப் பொருள் பேணல்: 55
சாமுவேல் ஆபிரகாம்

மாம்பழக்கவி—சில பாடல்கள்: 63
பண்டித. ரா. திம்மப்பையர்

அருள் மொழி: 65
டாக்டர் மா. இராசமாணிக்கனர்

இயற்கையும் கவிஞரும்: 70
சுப. அண்ணாமலை

உயிர்ப் பொருள் பேணல்: 77
சாமுவேல் ஆபிரகாம்

இலக்கியச் சூழ்நிலையில் புராணங்கள்: 87

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

அருள் மொழி: 97

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

உழைப்பும் உயர்வும்: 105

தி. கண்ணம்மாள்

அழகோ அழகு 111

சிலம்பும் சமுதாயமும் 115

மா. ரா. இளங்கோவன்

மாம்பழக்கவி—சிலபாடல்கள்: 2. 123

பண்டித ரா. திம்மப்பையர்

தமிழர் சமயம்: 126

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா: 129

இயற்கைக் காட்சி: 137

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

தமிழர் பொருளாதார வரலாறு: 145

டாக்டர் பெ. நடராசன்

துப்பைக் கோழி: 156

மா. ரா. இளங்கோவன்

மேடைப் பேச்சு: 161

திரு. பி. டி. இராசன் அவர்கள்

கலையும் வாழ்வும்: 167

திரு. மா. ரா. இளங்கோவன் அவர்கள்

உலகம் தமிழ் மயம்: 175

திரு. A. சுப்பையா பிள்ளை அவர்கள்

மதுரைத்தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:

ஆங்கிலத்-தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:

இலக்கியச் சூழ்நிலையில் மக்கள் தேவை: 198

மெ. சுந்தரம்

ஒரு சிறு குறிப்பு—"தீர்ந்ததன் தீர்பு": 202

பண்டித. தெ. நாராயணசாமியார்

பொய்யடிமை இல்லாத புலவரும் சேக்கிழார் பெருமானுர் கருத்தும்: 208

வித்துவான். பாலூர் கண்ணப்ப முதலியார்

சிலப்பதிகாரம்—திருமணமும் இல்வாழ்க்கையும்: 213

டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

பல்யானைச் செல்கெழு குட்டுவன்: 220, 225

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

சங்க காலத்தில் தமிழ் வளர்ந்த முறை: 238

டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

மொழியாராய்ச்சி: 242

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

தமிழ் இனம்: 246

டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

மதிப்புரை: ஷை 254

பிழை திருத்தம்: 256

பிள்ளைக் கறி: 257

ஔவை. சு, துரைசாமிப் பிள்ளை

திருக்கோவையார்—உரைப்பிழையும் திருத்தமும்: 269

பண்டித-வித்துவான், தி. சங்குப்புலவர்

கலைமகள் மாலை: 276

ஷை ஷை

வரலாறு காணுச் சேது நாடு: 278

சுப. அண்ணுமலை

டாக்டர். சர். ஆ. இலக்குமணசாமிமுதலியார் அவர்களுக்கு வரவேற்பு: 285

தமிழகம்: 289

மா. ரா. இளங்கோவன்

வேள்விக்குடிச் செப்பேடு: 298

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

கோற்கை: 307

டாக்டர். மா. இராசமாணிக்கனார்:

தமிழ் இலக்கியம் கற்க வழிமுறை: 315, 321

அ. கி. பரந்தாமனார்

மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகள் அறிவிப்பு:

என்றுமுள தென்றமிழ்: 337

டாக்டர். மா. இராசமாணிக்கனார்

மலையாள மறவர்: 345

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

மதிப்புரை: 351

டாக்டர். மா. இராசமாணிக்கனார்

தமிழ்ப் பொங்கல்: 353

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5,	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுநூல் (5) இனியநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மனீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	[illegible]
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	0	12	0
71.	திணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 52 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. N APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.